வாரப் பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, SILVERSMITH STREET, COLOMBO-12.

தாமரைப்பூ மார்க் சந்தனத்தைலம்
லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைப்பெற்றது நறுமணமுடையது எங்கும் கிடைக்கும்.
முழு இலங்கைக்கும் சோல் ஏஜண்ட்:- ஈ.ஹைதரலி & பிரதர்ஸ்
22, 2/7 ஆதமலி பில்டிங், கொழும்பு 11.

புத்தகம் 6 தொகுதி 8 | Registered as a News Paper at the G. P. O | நந்தன ஹூ ஆடிமீ 5உ (20-7-52) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் பிறை 27

# ★ கடன் நிவாரண இலாகாவில் உறவினருக்கு உத்தியோகம்

## வேலை கிடைக்காத விண்ணப்பதாரர்கள் நிதிமந்திரிக்கு மகஜர்

புதிதாக நிறுவப்பட்ட கடன் நிவாரண இலாகாவில் உத்தியோக நியமனம் பற்றி வெகுவாக அதிருப்தி காணப்படுகிறது.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் கடனைத்தீர்க்கும் பெரிய தேசீயப் பொறுப்பை வகிக்கும் இந்த இலாகா சென்ற வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பமுதல் அதனால் கைக்கொள்ளப்பட்ட உத்தியோக நியமனங்களை நோக்குமிடத்து, இந்த இலாகாவிலுள்ள பொறுப்புள்ள உயர்ந்த அதிகாரியொருவரின் உறவினர்களான வேலையற்ற வாலிபர், யுவதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் இடமாக இந்த இலாகா மாறிவிட்டது தெரியவரும்.

இந்த இலாகாவின் பெரும்பான்மையான உத்தியோகங்கள் ஏற்கனவே அவ்வதிகாரியின் உறவினர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டன.

இவ் வாரம் சுதந்திரன் நிருபர்களைக்கொண்ட ஓர் கோஷ்டி கவனமாக இதை ஆராய்ந்ததில் இக் கனவானுடைய மைத்துனன், மைத்துனி, மருமகன் முதலிய 6 பேர்களுக்குக் குறைவில்லாதவர்கள் ஏற்கனவே இந்த இலாகாவில் வேலைக்கு அமர்த்தப்பட்டது தெரியவந்தது. அவர் குடும்பத்தைச் சேர்ந்த அதிகப்படியான அங்கத்தினர்கள் அங்கு உத்தியோகஸ்தர்களாக இருப்பது நிரூபிக்கக் கூடியதாகவிருக்கிறது.

இம் மாதத்தில் மட்டும் வருஷம் 6,000 ரூபாயைச் சம்பளமாகக்கொண்ட பொறுப்புள்ள ஓர் பதவி, அந்தக் கனவானின் மருமகனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எப்படியிருந்தபோதிலும் இந் நியமனமானது பிரஸ்தாப கனவான் அங்கத்தினராயில்லாத—ஆனால் அவர் செல்வாக்கு வகிக்கும் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு போர்டினால் செய்யப்பட்டது.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை இந்தக் கோலாகலத்தின் முழு விபரங்களும் இன்னும் தெரியவில்லை. இந்த இலாகாவுக்கு வேலைக்கு விண்ணப்பம் போட்டுத்தோல்வியடைந்த சிலர், பிரஸ்தாப இலாகாவில் நடக்கும் நேர்மையற்ற உத்தியோகத் தெரிவு விஷயம்பற்றி விசாரணை நடத்தும்படி கோரி நிதி மந்திரிக்கு ஓர் மகஜரைச் சமர்ப்பிப்பார்கள் எனத் தெரிகிறது.

### ஸ்தலஸ்தாபனத் தேர்தல்
### கொழும்பு முனிசிபல்சபை அவசரக் கூட்டம்

ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களை ஒத்திவைத்ததை முன்னிட்டும், இந்தியர்களுக்கு ஸ்தலஸ்தாபன வாக்குரிமை பறிக்கப்படுவதை உத்தேசித்தும் கொழும்பு முனிசிபல் சபை சீக்கிரம் ஓர் அவசரக் கூட்டத்தை நடத்தலாமெனத் தெரிகிறது. சபையிலுள்ள எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இவ் விஷயமாக இப்போது விவாதித்து வருவதுடன் அவசரக் கூட்டமொன்றை நடத்தி சபையின் கருத்தை வெளியிடுமாறு மேயரைக் கேட்டுக்கொள்ள உத்தேசித்துள்ளார்கள்.

## புதிய தாக்குதலுக்கு அரசாங்கம் ஆயத்தம்

### ஸ்தல ஸ்தாபனத் தேர்தலிலும் வாக்குரிமை பறிமுதல்

உலக மக்களின் ஏகோபித்த கண்டனத்திற்குட்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தைக்கொண்டு பொதுத் தேர்தலை நடத்திய சகாப்தம் முடிவடைந்துவிட்டது. இப்பொழுது பிரஜாவுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் ஸ்தலஸ்தாபனத் தேர்தலை நடத்தப்போகும் சகாப்தம் உதயமாகியிருக்கிறது.

பிரஜைகள் அல்லாதவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களின் வாக்குரிமையைப் பறித்து, ஸ்தலஸ்தாபனங்களுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களுக்குள்ள கொஞ்சநஞ்ச உரிமைக்கும் உலை வைப்பதற்காக சமீபத்தில் அரசாங்கம் ஒரு சட்டத்தை இயற்றும்.

பாராளுமன்றத் தேர்தல் இடாப்புகளைப்போல ஸ்தலஸ்தாபனத் தேர்தல் இடாப்புகளையும் திருத்தி அச்சிடுவதற்காக இவ் வருட இறுதியில் நடைபெறவேண்டிய ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களை ஒத்திப்போடுவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

இந் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக மகத்தான தியாகங்களைச் செய்த இலங்கைவாழ் இந்திய சமூகத்தைத் தாக்குவதற்கு மற்றுமொரு காட்டுமிராண்டிச் சட்டம் தயாராகிறது.

இலங்கையின் ஜனத்தொகை 77 42 000 குழந்தைகளைத் தவிர்த்து, அரிசிக் கூப்பன் புத்தகங்கள் கொடுக்கப்பட வேண்டியவர்களின் தொகை 69 42 000 ஆனால் அச்சிடப்பட்ட கூப்பன் புத்தகங்களின் முழுத் தொகை 73 00 000 ஆகவே 3,58,000 கூப்பன்கள் அதிகப்படியாக ஏன அச்சிடப்பட்டன?

பொதுத் தேர்தலில் சில குறிப்பிட்ட தொகுதிகளுக்கு பதினாயிரக்கணக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன என்று எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினாரல்லவா? 3,58 000 கூப்பன் புத்தகங்களை அதிகப்படியாக அச்சிட்டிருக்கும்போது, வாக்குச் சீட்டுகளையும் ஏன் அதிகப்படியாக அச்சிட்டிருக்க முடியாது?

## வெளியேற்ற உத்தரவை வாபஸ் வாங்குக!

### கல்-ஓயா சிப்பந்திகள், பொதுமக்கள் கோரிக்கை

கல்—ஓயா அபிவிருத்தி சபையின் நிர்வாகத்தின்கீழ் தொழிலாளருக்காக வீடுகளை அமைக்கும் கட்டிட வேலை நிறுத்தப்பட்டுவிட்டது.

அங்கு வசிக்கும் பல ஏழைக் குடும்பங்களுக்கு உடனே வெளியேறும்படி மேற்படி சபை உத்தரவிட்டிருப்பதை "சுதந்திரன்" ஏற்கனவே வெளியிட்டிருக்கிறது. இதனை எதிர்த்து சபைச் சிப்பந்திகளிடமிருந்தும் அந்த பிரதேசத்தில் வசிக்கும் கிராமாந்தர மக்களிடமிருந்தும் ஆட்சேபனைகளும் கண்டனங்களும் கிளம்பியிருக்கின்றன.

வெளியேற்ற உத்தரவை வாபஸ் வாங்கும்படியும், அக்குடும்பத்தினர் வசிப்பதற்காக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமொன்றை அமுல் நடத்தும்படியும் அவர்கள் கடந்தவாரம் சபையைக் கேட்டுக் கொண்டனர்.

பிரதம மந்திரியையும் சமீபத்தில் பேட்டிகண்டு இதே கோரிக்கை சமர்ப்பிக்கப்படுமென்று தெரிகிறது.

## இசைப் பரிசோதனையில் முஸ்லிம்களுக்கு இடமில்லையா?

### இலங்கை வானொலியின் பட்சபாதம்

ரேடியோ ஸிலோன் தமிழ் பகுதியினர் வானொலி இசைக் கலைஞர்களைத் தரம்பிரிப்பதற்காக சமீபத்தில் ஒரு விசேஷ இசைப் பரிசோதனையை நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இப்பரிசோதனையை பேராசிரியர் ஸ்ரீனிவாசன் நடத்துவார் எனத் தெரியவருகிறது. இப்பரிசோதனைக்கான பாடத் திட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் தேவாரம் முதலிய தோத்திரப் பாடல்கள் என்று ஒரு பிரிவு இடம் பெற்றிருக்கிறது. கிறிஸ்தவ கீதம் என்று இன்னொரு பிரிவு இடம் பெற்றிருக்கிறது. ஆனால் முஸ்லிம்களுக்கோ முஸ்லிம் தோத்திரப் பாடல்களுக்கோ இடமளிக்கப்படவில்லை. இந்தப் பட்சபாதம் ஏன்?

முஸ்லிம்கள் தரம் பிரிப்பதற்கு லாயக்கற்றவர்களா? அன்றி முஸ்லிம் பாடகர்கள் தரம்பிரிக்கப்படாமலே ரேடியோ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள விசேஷ சலுகை பெற்றவர்களா?

இத்தகைய சமய பேதமும் பாரபட்சமும் அகில இந்திய வானொலியின் எந்த நிலையத்திலேனும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

## சாவகச்சேரி பிரதிநிதியின் மந்திரிபதவி சட்டவிரோதம்

### மந்திரிசபையின் முடிவுகளும் செல்லாதாம்

புதிய மந்திரி சபையில் முதன்முதலாக தற்காலிக மந்திரி பதவியைப் பெற்ற 'பெருமை' சாவகச்சேரி பிரதிநிதி திரு குமாரசாமிக்குத்தான் உண்டு. ஆனால் அரசியல் சட்டப்படி அவர் மந்திரியாக முடியாதென்ற பிரச்னை கிளம்பியிருப்பதால், சட்டப்படியாக நியமிக்கப்படும் மந்திரி ஒருவருக்குத் தனது மந்திரி ஸ்தானத்தைக் காலி செய்து கொடுத்துவிட்டு அவர் வெளியேறிவிட வேண்டுமென்று கூறப்படுகிறது. ஆனால் சட்டப்படி மந்திரியாகும் அதிர்ஷ்டமும் மீண்டும் அவர்மீதுதான் விழக்கூடும்.

இந்த தற்காலிக மந்திரியையும் கலந்துகொண்டு மந்திரி சபை செய்த முடிவுகளெல்லாம் சட்டவிரோதமானவை என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

வரியொன்றுக்கு 50 சதம். 6 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூபாய் 3-00.

### தேவை

கொழும்பில் வசிக்கும் ஒரு கண்ணியமான, குழந்தைகள் இல்லாத தமிழ் குடும்பத்திற்கு சமையல் வேலை செய்ய நடுத்தர வயதுடைய வேலைக்காரி தேவை. L A. I. C/o சுதந்திரன்.

வின்ஸ்லோ பாதிரியாரின் தமிழ் ஆங்கில அகராதி தேவை.
எஸ். ஆர். 196, தட்டாதெரு
கொழும்பு.

டபிள் டிமை சைஸ் பத்திரிகை அடிக்கக்கூடிய செலிஸ் உடனடியாக தேவை. விண்ணப்பிக்க.
மானேஜர், சுதந்திரன்
194, ஏ தட்டாதெரு.
கொழும்பு-12.

### வியாபாரம்

மிஸ் கனகம்-புதுமையான நாவல் 35 பக்கங்கள். தெள்ளிய தமிழ்நடை. விற்பனவு ஏஜண்டுகள் தேவை நல்ல கமிஷன் தரப்படும்.
156, தட்டாதெரு,
கொழும்பு.

### விற்பனைக்கு

ஒரு வருடம் பாவித்த றெலி சைக்கள் விற்பனைக்குண்டு. டைனமோ, பம்பு, காரியர் எல்லாம் இணைக்கப்பட்டிருக்கிறது விலை குறித்து எழுதுக.
L. A. 201
C/o சுதந்திரன்

## புதிய சத்தியாக்கிரக முறை

இந்தூர்—

சோஷலிஸ்ட் கட்சி ஒரு புது தினுசான 'சத்தியாக்கிரஹம்' ஆரம்பிக்க இருக்கிறது. மத்திய பிரதேச சர்க்கார் மந்திரிகள் உள்ளே செல்ல இயலாதவாறு அவர்களது அறைகளைப் பூட்டி விடுவதே இப்புது முறை இயக்கம்.

கதவடைப்பு செய்துள்ள ஸ்தலமில் ஒன்றை திறக்க சர்க்கார் ஏற்பாடு செய்யாவிட்டால் அடுத்த வாரம் முதல் தாங்களும் தங்கள் 'கதவடைப்பு' சத்தியாக்கிரகத்தை நடத்தப் போவதாக சோஷலிஸ்டுகள் தெரிவித்துள்ளனர்.

## கட்டளைக் குருவுக்கு பிரியாவிடை

கரவெட்டி—

"இன்று இக்கிராம இளைஞரிடையே தன் மான உணர்ச்சியும், இன முழக்கமும்" யாதும் ஊரே யாவரும் கேளிர் "என்ற விரிந்த நோக்கும் இருப்பதற்கு ஒரு காரணம் உண்டெனில் அது வணக்கத்துக்குரிய பிதா எஸ். தியோகுப்பிள்ளை தான் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது" என்று கரவெட்டி கட்டளைக்குருவுக்கு சமீபத்தில் நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டத்தில் திரு. அகஸ்தீன் பொன்ராசன் குறிப்பிட்டார்.

## கேட்டுப்பாருங்கள்

குயுக்தி

பி. சின்னச்சாமி
ஹல்கிரன் ஓயா

கே: நான் ஒரு பத்திரிகை நிருபராக வர விரும்புகிறேன். முதலில் என்ன செய்ய வேண்டும்?

ப: முதலில் ஒரு துப்பு ஆலையில் சேர்ந்து கயிறு திரிக்கப் பழக வேண்டும்.

* * *

ஆர். மோஹினி,
எல்பிட்டி

கே: பொய் என்றால் என்ன?

ப: மத குருவுக்கு மந்திரம். வக்கீலுக்கு வயிற்றுப் பிழைப்பு. தினப் பத்திரிகைகளில் பக்கத்தை நிரப்பும் வஸ்து. வயது என்ன என்று கேட்டால் சகல பெண்களின் வாயிலிருந்தும் வெளிவருவது.

* * *

"சூனுமானு"
மஸ்கெலியா

கே: இன்றைய உலகில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர் யார்?

ப: திரு சிவபெருமான் அவர்கள் என்றே சொல்ல வேண்டும் அவர் எவரஸ்டை அடுத்த கைலயங்கிரியில் வாழ்வதாகச் சொல்லப்படுகிறது இது சுமார் 5 மைல் உயரம் இருக்கும்.

* * *

கே. எஸ். சாகுல் ஹமீது
பொல்காவலை

கே: மறக்கத்தக்கதுஎது, மறக்கத்தகாதது எது.

ப; மறக்கத்தக்கது பிறர் செய்யும தீமை; மறக்கத்தகாதது செய் நன்றி.

* * *

டி. ஆனந்தரேசன்
கொள்ளுப்பிட்டி

கே: நமது நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படுமா?

ப: டட்லி அரசாங்கத்தின் முதலாவது சாதனை அரிசி விலையை அதிகரிப்பதுதான் என்பது நிச்சயம்.

* * *

எம். கதிரேசன
நாவலப்பிட்டி

கே: செஞ்சீன மக்கள் நாட்டில் ஏற்பட்ட உணவு நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளித்து மற்ற நாடுகளுக்கு அரிசி அனுப்ப முன் வந்திருக்கிறார்களே அது எப்படி ஏற்பட்டது?

ப: செஞ்சீன நாட்டில் தலைவர்கள் 'போதித்ததையே தாங்களும் செய்து காட்டினார்கள். அதாவது அவர்களும் விவசாயத்தில் ஈடுபட்டார்கள் இங்கு நமது ஒலிவர் வீட்டுத் தோட்டங்கள் வையுங்கள் என்று போதிப்பார் அவர் வீட்டில் குரோட்டன்ஸ் செடிக்குத்தான் நீர் வார்க்கப்படும்

* * *

ஏ. முத்துகிருஷ்ண
பொாதப்பிட்டி

கே; மனிதனுக்கும் பறக்கக் கூடிய சிறகு இருந்தால் அவன் என்ன செய்வான்?

ப: எடுத்ததற் கெல்லாம் ஆலாய்ப் பறப்பான்.

கே: புகழ்ச்சியென்றால் என்ன?

ப: இல்லாததை இருப்பதாகச் சொல்லும் நாசுகான கற்பனை.

ஏ. சின்னமுத்து
பண்டாரவளை

கே: பொய் சொல்லாமல் உம்மால் வாழ முடியுமா?

ப: எப்படி முடியும்? அடுத்த வீட்டு அண்ணாசாமிப் பிள்ளையைப் பார்த்ததும் எனக்கு அனுமாரின் ஞாபகம்வருகிறது. உடனே சிரிக்கிறேன். அவர் "என்ன தம்பி சிரிக்கிறீர்கள்?" என்று கேட்கிறார் ஒன்றுமில்லையண்ணே என். எஸ். கிருஷ்ணனின் படம் ஒன்றைப் பார்த்தேன் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது என்கிறேன். உண்மையைச் சொல்லி வாழ முடியுமா?

* * *

மு ஆருமுகம்
தெஹிவளை

கே: இந்தியாவில் நிறையக் கிடைப்பது எது? குறையக்கிடைப்பது எது?

ப: நிறையக் கிடைப்பது கோயில்கள். குறையக் கிடைப்பது சுகாதாரம்.

கே: ஒருபெண் என்னைப் பார்த்து அடிக்கடி கண்ணைச் சிமிட்டுகிறாள். என்ன செய்வது?

ப: ஒரு கறுத்த மூக்குக் கண்ணாடி வாங்கி அவளுக்கு அனுப்பி வையும்

* * *

வீ இளையபெருமாள்
நீர்கொழும்பு

கே: கடவுள் மனிதனுடன் பேசும் பாஷைக்குப் பெயர் என்ன?

ப: பசி.

* * *

ச. இராசையா,
நல்லூர்

கே: மேல் நாடுகள் விஞ்ஞானத்தில் முன்னேறுகிறது. இலங்கை எதில் முன்னேறுகிறது?

ப: இலங்கைமோசடிநாயகத்தில் முன்னேறுகிறது

* * *

சென்மகன்,
செங்கலடி

கே: சமீபத்தில் நடைபெற்றுவரும் சத்தியாகிரகத்தைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நாளிலும் பொழுதிலும் அந்த இயக்கம் இந்த நாட்டில் சத்தியத்தை நிலைநாட்டிவருகிறது என்பதுதான்

* * *

க. கந்தசாமி,
திரிகோணமலை

கே; இலங்கைப் படத்தை முதல்முதல் வரைந்த சித்திரக்காரர் யார்?

ப: இலங்கைப் படத்தை முதல்முதல் வரைந்தவர் இயற்கையன்னை.

கே: தவத்தின் உருவம் யாது?

ப: தவத்தின் உருவம் சிவம் என்கிறது புராணம். ஆனால் சிவத்தின் உருவம் என்ன என்று கேட்டுவிடாதீர்கள். அது யாருக்குமே தெரியாது

* * *

த. செல்லத்துரை
கல்முனை

கே; வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கின்றீர். உமக்கு ஜோசியம் தெரியுமா?

ப: இல்லை; எனக்கு ஹாஸ்யம தெரியும்

காச வியாதியால் கஷ்டப்படும் சகோதர சகோதரிகளே

தங்கள் வியாதி திரும்பி வராதிருக்க ஹோமியோபதி சிகிச்சை முறை ஒன்றே உங்கள் வியாதியை வேருடன் களைந்தெறியும்


மந்தாரம் போட்டவுடன் ஏற்படும் காசம், வெயில் காலத்தில் ஏற்படும் காசம், உஷ்ணத்தினால் ஏற்படும் காசம், சுவாச கோசக் குழாய்களில் ஏற்படும் காசம், ஜலதோஷம் ஏற்பட்டவுடன் ஏற்படும் காசம், வாயு தொந்தரவினால் ஏற்படும் காசம், புஷ்பங்கள், மிருகங்களின் வாசனை (நாய், குதிரை) பட்டவுடன் ஏற்படும் காசம் ஆகிய எந்த ரகத்தைச் சேர்ந்த காச வியாதியும் வேருடன் களையும். இரவு 12 மணிக்கும் 3 மணிக்கும் மாலை 6 மணிக்கும் 9 மணிக்கும் பகல்களிலும் ஏற்படும் காசமும் (திடீரென்று தோன்றி மூச்சுத் திணறுதல் உண்டாகி தூங்கிக்கொண்டிருப்பவர் எழுந்து முன்புறமாக வளைந்து உட்கார்ந்து கொள்ளுவார்கள். இது முக்கிய குறி) வியர்வை பொழியும், சரீரம் சில்லிட்டுப் போகும். வியாதியஸ்தர் வியாதிகளை விபரமாக எழுதவேண்டும்.

வியாதி விபரப் பேப்பர் பந்து சதம் அனுபி பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். டி. மதுர நாயகம் அன் கம்பெனி,**
மதுரநாயகம் வைத்தியசாலை,
211, செட்டியார் தெரு, கொழும்பு 11

**லைப் காட்**

பழக்கம் உங்கள் குடும்பங்களை பாதுகாக்கும்




லைப் காட் என்பது நோய்க் கிருமிகளைக் கொல்லும் ஓர் விஞ்ஞான ஆயுதம். எப்பொழுதும் வீட்டில் ஒரு போத்தல் வைத்திருந்து கீழ்க் காணப்படும் முக்கிய விதிகளின்படி உபயோகியுங்கள்.



1. கொள்ளை நோய் காலங்களில் லைப்காட் கலந்த நீரால் அடிக்கடி கொப்பளியுங்கள்.
2. கைகள் மூலம் நோய் தொற்ற விடாமல் லைப்காடினால் கைகளைக் கழுவுங்கள்.



3. விஷக்கடிபட்ட பாகத்தில் லைப்காடினால் ஒற்றி வேதனையையும் வீக்கத்தையும் குறையுங்கள்.
4. குழந்தைகளின மேல் படும் வெட்டுக்கள் உரை காயங்களில் விஷக்கிருமிகள் தாக்கவிடாது உடனே லைப்காட் கடவுங்கள்.
5. உங்கள் மனைவியின் கர்ப்பகாலத்தில் பாவிப்பதற்கு லைப்காட் வைத்திருங்கள்.

**லைப்காட்** எனப்படும் உன்னத புரை சம்கார, கிருமி நாசனி உங்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத ஓர் நிவாரணி.

இலங்கை ஏஜண்டுகள்
ஜே. எச். வவஷியர் அன் கம்பெனி
(ஸிலோன்) லிமிடெட்
யோர்க் வீதி, கொழும்பு,
J. H. Vavasseur & Co. (Ceylon) Ltd.

6 அவுன்ஸ் போத்தல் விலை 1-50
12 அவுன்ஸ் போத்தல் ஒன்று விலை 2-75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்;

# சோற்றுப் பஞ்சமில்லாத சோழவள நாடு

## களைப்புத்தீர மதுவே மருந்தாம்

## கரிகாற் சோழனின் சிறப்பு

(சாமி சிதம்பரனார் எழுதியது)

### பொருநர் ஆற்றுப்படை

கூத்தருக்கும், புகழ்வோருக்கும் பொருநர் என்று பெயர் ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்துதல் என்று பொருள். பொருநர் ஆற்றுப்படை.—புகழ்வோருக்கு வழிகாட்டி விடுதல்.

இது 248 வரிகளைக் கொண்ட ஒரே பாட்டு. ஒரே பாடலைக் கொண்ட ஒரு நூல்.

இதைப்பாடியவர் பெயர் முடத்தாமக்கண்ணியார். இது கரிகாற் சோழன மீது பாடப்பட்டது.

கரிகாற் சோழனிடம் பரிசில் பெற்றுவந்த ஒரு பொருநன், மற்றொரு பொருநனைப் பார்த்துக் கூறுவது போலப் பாடப்பட்டது. கரிகாற் சோழனுடைய பெருமையைச் சொல்லி, நீ அவனிடம் சென்றால் அவன் உன்னை இன்னின்ன விதமாக உபசரிப்பான் என்று ஒரு பொருநன மற்றொரு பொருநனிடம் சொல்லும் முறையில் இந்த நூல் செய்யப்பட்டிருக்கின்றது.

பொருநர் ஆற்றுப்படையில் கரிகாற் சோழனுடைய வள்ளன்மையைக் காணலாம். அவனுடைய வீரத்தைக் காணலாம். காவிரியாற்றின சிறப்பு; சோழநாட்டின வளப்பம்; ஆகியவைகளைக் காணலாம்.

ஓரிடத்தில் ஏழை மக்களின் கிழிந்த ஆடையைப் பற்றி அப்படியே இயற்கையாகக் கூறப்பட்டுள்ளது

'ஈரும் பேனும்
இருந்து இறைகூடி
வேரொடு நனைந்து,
வேற்று இழை நுழைந்த
துன்னல் சிதர் அர்'

"ஈரும் பேனும் இருந்து அரசாள்வது; வேர்வையோடு கூடி நனைந்திருப்பது; அந்தத் துணியின் நூலையல்லாத வேற்று நூல்கள் உள்ளே புகுந்திருக்கின்ற, தையல்போட்ட கிழிந்த ஆடை"

இவ்வாறு வறியவர் அணியும் உடையைக் கூறியிருக்கிறார் இந் நூலாசிரியர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் மிக உயர்ந்த நிலையில் இருந்தது. இதைப் பொருநர் ஆற்றுப்படையின் மூலம் காணலாம்.

கண்பார்வைகூடச் செல்ல முடியாத மெல்லிய நூலால் நெய்யப்பட்டது. பூவேலைகள் செய்யப்பட்டது. பாம்பின் தோலைப் போன்றது. இத்தகைய ஆடை அந்தக் காலத்தில் நெய்யப்பட்டது இதை

"நோக்கு நுழைகல்லா
நுண்மைய, பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை"

என்ற அடிகளால் அறியலாம்.

அந் நாளில் தமிழர்கள் அழகிய பட்டாடைகள் அணிந்தனர். பட்டாடைகளில் நெய்தனர். கண் கவரும் கரைகள் அமைத்துப் பட்டுடைகள் நெய்திருக்கின்றனர். இதனை

'கொட்டைக் கரைய
பட்டுடை நல்கி'

என்ற வரியிலே காணலாம்.

இக்காலத்திலேயும் தமிழ்நாட்டிலே பலர் சாப்பிடும் முன்பு காக்கைக்குச் சோறிடுவார்கள். அதிலும் விரத நாட்களில் காக்கையைக் கா கா என்று கூவியழைத்து முதலில் அதற்குச் சோறு வைத்த பிறகுதான், தான் சாப்பிடுவார்கள். இந்த வழக்கம் தமிழருடைய பண்டைக்கால வழக்கமென்று தெரிகிறது.

உயரமில்லாத தென்னை மரங்கள் நிறைந்திருக்கின்ற குளிர்ந்த சோலை, அந்தத் தென்னந்தோப்பில், வாசலில் நெல் குதிர் நிறைந்திருக்கின்ற குடிசை. அந்தக் குடிசையில வாழ்வோர் இரத்தங்கலந்த சோற்றைப் பலியாகக் கொடுத்தனர். அந்தப் பலியை உண்டன கரிய காக்கைகள் என்று இந்த நூலில் சொல்லப்படுகின்றது இதனை 181, 182, 183, 184 ஆகிய வரிகளிலே காணலாம்.

தமிழ் நாட்டில் பண்டைக காலத்தில் பண்டமாற்று முறைதான் வழக்கத்தில இருந்து வந்தது. பண்ட மாற்றுதல் என்பது தன்னிடத்தில் உள்ள பண்டத்தைக் கொடுத்து அதற்கு பதிலாகத் தனக்கு வேண்டிய வேறு பண்டத்தைப் பெற்றுக்கொள்ளுதல். பண்டைக் காலத்தில் பெரும்பாலும் உலக முழுதும் இந்த முறைதான் இருந்து வந்தது. இதுவே அக் காலத்திலிருந்த வாணிக முறை. இந்த முறை இப்பொழுதும் வழக்கத்திலிருந்துவருகிறது.

இம் முறையைப் பொருநர் ஆற்றுப்படை ஆசிரியர் அழகாகக் கூறியுள்ளார்.

தேனையும், நெய்யையும், கிழங்கையும் கொடுத்தவர்கள் அவைகளுக்குப் பதிலாக மீன், நெய் இவைகளை வாங்கிக்கொண்டு போகின்றனர். இதை

தேனெய்யொடு
கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு
நறவு மறுகவும்

என்ற வரிகளால் காணலாம்.

இனிய கரும்பு, அவல் ஆகியவைகளைக் கொடுத்தவர்கள் அவைகளுக்குப் பதிலாக, மான் இறைச்சியையும், கள்ளையும் வாங்கிக் கொண்டு போகின்றனர். இதனை

தீங்கரும்போடு
அவல் வகுத்தோர்
மான் குறையொடு
மது மறுகவும்


என்ற வரிகளால் காணலாம்.


காவிரி நாடு என்று சோழநாட்டிற்குப் பெயர். காவிரியாறு பாயாவிட்டால் 'சோறுடைத்து' என்ற பாட்டே புறப்பட்டிருக்காது தமிழ்நாட்டில் எப்பாகத்தில் பஞ்சம் வந்தாலும் சோணாட்டில் சோற்றுப் பஞ்சம் வருவதில்லை. மழைப் பெய்யாமல் வானம் வரண்டுபோனாலும் சோழ நாட்டிலே நெல் விளைவு அற்றுப் போய் விடுவதில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சோழ நாட்டிலே ஒரு வேலி ஆயிரம் கலம் விளைந்ததாகப் பொருநர் ஆற்றுப்படை கூறுகின்றது. ஒரு கலம் என்பது பட்டணம் படி 24 கொண்டதாகும். இம்மாதிரி விளைந்ததற்குக் காரணம் காவிரியாறுதான். இதனை அழகான சொற்களால் தொடுத்துக் கூறுகிறார் பொருநர் ஆற்றுப்படை ஆசிரியர்.

"மேகம் மழை பெய்வதை மறந்துவிட்டாலும், பெரிய வறட்சியேற்பட்ட கெட்ட காலத்திலும், தேனும், நரந்த மலரும், அசில் கட்டைகளும், சந்தனக் கட்டைகளும் சுமந்து கொண்டு ஒவ்வொரு துறைகளுக்கும் ஓடும்; நுரையும், ஓசையும் உடைய நீர் குளங்களில் புகுந்தவுடன் நீராடும் பெண்கள் உடனே அந்த நீரில் விழுந்து விளையாடுகின்றனர். வளைந்த அரிவாளால் நெற்பயிரை அறுத்து, வெய்யிலிலே காயவைத்து நெல்லைத் தனி

(12-ம் பக்கம் பார்க்க)

விவசாயம், கைத்தொழில் முதலானவைக்கு வேண்டிய
இணையற்ற இயந்திரங்கள்
"வாம்பேட்ஸ்"



தானே இயங்கும் இயந்திரங்கள், தானியம் அரைக்கும் இயந்திரங்கள்
உங்களுடைய அரிசி, வரகு, மிளகு, கோப்பி, கொக்கோ முதலியவை அரைப்பதற்கும், மருந்து மூலிகள் அரைப்பதற்கும் மேற் குறித்த யந்திரங்கள் கைதேர்ந்தவை.
எங்களிடம் ஏராளமான இயந்திரங்களும் அவற்றின் இணைக் கருவிகளும் இருக்கின்றன.
உங்கள் தேவைகட்கு எங்களிடம் வாருங்கள்
இலேசாக இயங்கக்கூடியவை. மிகவும் சக்திவாய்ந்தவை.
நீண்டகால உழைப்பு.
சாமுவேல், சன்ஸ் அன் கம்பெனி, லிமிட்டெட்,
371, பழைய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 2341. தபாற்பெட்டி: 46 …லிகிராம்ஸ்: "எச்அயர்ன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ராஜினாமா

"அபேதன்"

> ஒரு நாட்டின் மதிமந்திரியாக விருக்கலாம். ஆனால் அவன் மதியிலே மதுவும் மாதுவும் இடம் பெற்று, அவன் காலடியின்கீழே படுகுழி தோண்டும் சதியும் நடைபெற்றால் அவன் கதி..............................

கிறிஸ்து பிறக்க இன்னும் சில நூற்றுண்டுகள் இருக்கின்றன. கிரேக்க ராஜ்யம் மகோன்னத நிலையில் மிளிர்ந்துகொண்டிருந்த காலம் ஷெரிடன் சக்கரவர்த்தி சிம்மாசனம் ஏறி நீண்டகாலம் ஆகவில்லை

ஆனால், வலி புருடஸ்ஸின் நீண்டகாலக் கனவு ஷெரிடன் ஆட்சியில் நனவாயிற்று. இளம் வயதினனான வலி புருடஸ் தான் கிரேக்க சாம்ராஜ்யத்தின் மதி மந்திரிகளில் ஒருவனாக வேண்டுமென்று ஆசைப்பட்டான் ஷெரிடன் அவனை யுத்த மந்திரியாக நியமித்தான

* * *

ஸலோனிக்கா கிரேக்க நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்கிற்று. அதென்ஸ் தலைநகரமாகயிருந்தபோதிலும் ஸலோனிக்காதான் ராணுவத் தலைநகரமாக இடம் பெற்றது படைகளுக்கு வேண்டிய தளவாடங்கள் உபகரணங்கள் யாவும் அங்கு உற்பத்தி செய்யப்பட்டன. பெரும் பெரும தளவாட சேமிப்பு சாலைகளும் அங்குதான் இருந்தன.

தளபதி லாசன் பரபரப்புடன் காணப்பட்டான். ராணுவ உற்பத்தி, சேமிப்பு ஆகிய சகலவற்றிற்கும் அவனே மேலதிகாரியாகவிருந்தான் அவனுடைய நிர்வாகத்தின் கீழ் ஏகப்பட்ட ஊழல்கள் நடைபெறுவதாக ஏற்கனவே புகார் அடிபட்டது. அரசாங்கப் பணம பல வழியிலும் கையாளப்படுவதாக அவநம்பிக்கை நிலவியது.

யுத்த மந்திரி வலி புருடஸ் அன்று ஸலோனிக்காவுக்கு விஜயம் செய்வதாகவும் யுத்த உபகரண உற்பத்தி சாலையைப் பார்வையிடுவதாகவும் இருந்தது. அதனால்தான் தளபதி லாசன் சற்று பரபரப்படைந்திருந்தான்.

மந்திரி புருடஸ் தனது வெள்ளைக் குதிரையிலிருந்து கீழே இறங்கியதும் தளபதி லாசன் அவனைத் தொழிற்சாலைக்குள் அழைத்துவந்தான்.

தொழிற்சாலை கட்டம் கட்டமாக வகுக்கப்பட்டிருந்தது. ஒரு புறப் படையினருக்கு சப்பாத்து தைக்கும் பகுதி அருகு மலைபோல் சப்பாத்துக்கள் குவிந்துகிடந்தன. அதையடுத்து தொப்பி உற்பத்தியாகும் பகுதி; அதையடுத்து தோல் பைகளும் தண்ணீர் பைகளும் உற்பத்தியாகும் பகுதி; அதையடுத்து உடை தயாரிக்கும் பகுதி; இப்படியாக இருந்தன.

ஒவ்வொரு பகுதிக்கும் உரிய அதிகாரிகள் அந்தந்தப் பகுதியின் வாயிலில் ராணுவ உடையில் விறைப்பாக நின்று மந்திரிக்கு மரியாதை செலுத்தினா

ஆனால் உடைப் பகுதியின் வாயிலில் மட்டும் ஒரு பெண்மணி நின்றுகொண்டிருந்தாள் அவள் ராணுவ முறைப்படி மரியாதை எதுவும் செலுத்தவில்லை. மந்திரியைப் பார்த்து ஒரு மோகினிப் புன்னகையை பரிமாறினாள் மந்திரியும் அதை ஏற்றுக் கொண்டான். இந்த கணநேர நிகழ்ச்சி தளபதி லாசனின் வல்லூற்றுப் பார்வையிலிருந்து தப்பவில்லை.

தளபதி லாசனின் இரகசியக் காரியாலய அறையில் ஒரு மகாநாடு கூடிற்று. ஏதேதோ பரிசீலனைகள் எல்லாம் நடைபெற்றன. தளபதி லாசனுக்கும் மந்திரி புருடஸுக்கும் கடிபிடிகளும நடைபெற்றன. மொத்தத்தில் லாசனுடைய வேலையும் நிர்வாகமும மந்திரிக்குப் பிடிககவில்லை என்பது புலனாயிற்று

மந்திரி எள்ளும் கொள்ளும வெடிக்கும முகத்தோடு தனியாக வெளியே றினான் தையல் பகுதியின் அதிகாரியான பெண அங்கேயே நின்றுகொண்டிருந்தாள அவளிடம் சென்று இரண்டு வார்த்தை பேசினான். காவலர்களான குதிரை வீரர்கள் புடைசூழ மந்திரியின வெண் குதிரை அதென்ஸ் நகரை நோக்கிப் பறந்தது

* * *

ராணுவ இரகசிய அறைக்குள் ஒரு பெரிய மேசையின் முன்னால், வட்டம்டும் நாற்காலியொன்றில் தளபதி லாசன் காணப்பட்டான். மேசையின் மறுபுறத்தில தையல் பகுதி அதிகாரியான அந்தப் பெண் ஒரு கைதேர்ந்த சிற்பி மனங் கவரும்படி வடித்தெடுத்த வெண்சலச் சிலையென நின்றுகொண்டிருந்தாள்.

தளபதி லாசன் ஒரு புன்னகையை வலிந்து வரவழைத்துக் கொண்டு "எமிலி, ஏன் பேசாமல் நிற்கிறாய்? பயப்படாதே, என் கேள்விக்குப் பதில் சொல். இந்த வலி புருடஸ்ஸை உனக்கு முன்பே தெரியுமா? உனக்கும அவனுக்கும் பழக்கம உண்டா?"

"ஆம்" என்னும் பாவனையாக தலையை அசைத்தாள அந்த அழகு சுந்தரியான எமிலி

"எப்படிப் பழக்கம்?"

"நமது ராணுவத்திற்கும் அரண்மனைக்கும் வேண்டிய கித்தான் துணிகளையும மஸ்லின பட்டுகளையும் ஏற்றிக்கொண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு கப்பல் இந்தியா தேசத்திலிருந்து இங்கு வந்ததல்லவா? அந்தக் கப்பலில் வந்த துணிமணிகளைப் பாரம் எடுப்பதற்காக நான் பிரேயஸ் துறைமுகத்திற்குச் சென்றிருந்தேன் பிரேயஸ்தான இந்த மந்திரியின் சொந்த ஊர். அங்கு அவருடைய மனைவியையும் குழந்தைகளையும சந்... ...து. அதன் ... அவருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது"

"சரி; அவன் வெளியே போகும்போது உன்னோடு ஏதோ பேசினானே, அது என்ன?"

"அதுவா? தான் அதென்ஸில் ஒரு விடுதியில் இருப்பதாகவும் கடந்த ஆறு மாதகாலமாகத் தயாரான ராணுவ உடைகளின் விவரங்கள அடங்கிய தஸ்தாவேஜிக்களை அங்குகொண்டுவந்து தனக்கு காட்டும்படியும் கூறிச் சென்றான்" என்றாள் எமிலி.

"சரி, நீ கொண்டுதானே போகிறாய்?"

"ஆமாம்"

பின்பு குரலைத் தாழ்த்திகொண்டு இருவரும் ஏதோ பேசினார்கள்.

* * *

'டக்டக' கென்று கதவில் தட்டும் சப்தம் கேட்டது. மந்திரி புருடஸ் எழுந்தான். அவனால எழுந்திருக்கமுடியவில்லை. கால்கள தள்ளாடின. வட்ட மேசைமீதிருந்த கூஜாவையும் வெள்ளிக் கிண்ணத்தையும் எடுத்து புத்தகங்கள். அடுக்கப்பட்டிருந்த பெட்டியின் பின்னால் பதுக்கினான்.

"உள்ளே வரலாம்" என்றான், அவன் வார்த்தைகள் தெளிவற்றுத்தான் கேட்டன

கதவு திறக்கப்பட்டது. ஒரு மோகினி வடிவம் போல் காட்சியளித்தாள் எமிலி. அவள் உள்ளே புகுமுன்பே அவள் தடவியிருந்த பாரிஸ் அத்தர் புருடஸின் மூக்கைத் தொளைத்தது.

"உட்கார்" என்றான் புருடஸ் எமிலி தயங்கினாள். "பரவாயில்லை, உட்கார்" என்றான் மீண்டும்.

"தங்களின் கீழ் வேலை பார்க்கும் அடிமைக்கு இத்தனை கௌரவமா?"—மழலை மொழியும் கிளியைப்போல் அவள் செவ்வதரங்கள் வனப்புற நெளிந்தன.

அவள் பால் வடியும் சுந்தர வதனத்தை ஏறிட்டுப் பார்த்தான் புருடஸ் அவன் கண்களில் மதுவின் போதைமட்டுமல்ல, பதவி மமதையின் போதை மட்டுமல்ல, மங்கையின்போதையும் வழிந்தோடுவதை அவள் கணடுகொண்டாள்.

புருடஸ் ஒரு குடிகாரனாய் இருப்பான என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. அவள மட்டுமென்ன கிரேக்க நாட்டில் யாருமே எதிர்பார்க்கவில்லை. அரிஸ்டிப்பாப்ஞானியின் போதனைகளில் திளைத்தவன் புருடஸ், அவர் பெயரால் தோன்றிய கலாசாலையில் படித்துத் தேறியவன புருடஸ், அப்படிப்பட்ட புருடஸ குடிகாரன் ஆவான் என்பதை யார்தான் எதிர்பார்க்கமுடியும்?

... பதார்த்தங்களும பட்சணங்களும் பரிமாறப்பட்டன எமிலிக்கு. அவள் எண்ணிக்கூட இருக்க முடியாத உபசாரம். இதெல்லாம் எதற்கு?

"தாங்கள் கேட்ட தஸ்தாவேஜிக்களைக் கொண்டு வந்திருக்கிறேன் பார்க்கிறீர்களா?" என்றாள் எமிலி.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் எமிலி. நான உன்னை மட்டும் பார்த்தால் போதும். என்றென்றும் உன்னையே பார்த்துக் கொண்டிருக்க முடியுமானால் அதுவே போதும். நீ இப்பொழுது எங்கு இருக்கிறாய்?"

"ஏன், தங்கள் முன்னால் தானே இருக்கிறேன்"

"அதை நான் கேட்கவில்லை. நீ எங்கு குடியிருக்கிறாய் என்றுதான் கேட்டேன்"

தன் இருப்பிடத்திற்கு மந்திரி வரவேண்டும் என்பதுதான் அவள் விருப்பமும் தன் இரண்டு சகோதரர்களுக்கு ராணுவத்தில் வேலை தேடிக்கொடுக்கவும் தன் பழைய சினேகிதப் பையன் ஒருவனுக்கு ஒரு உத்தியோக உயர்வு வாங்கிக்கொடுக்கவும் மந்திரியின் சினேகிதத்தைப் பயன்படுத்த திட்டமிட்டிருந்தாள் எமிலி. எல்லாவற்றிற்கும் மேலாக தளபதி லாசனின் திட்டம் அவள் உள் மனதில பச்சையாகவிருந்தது.

"என் வீட்டு விலாசத்தை ஏன் விசாரிக்கிறீர்கள்? ஏழையிடம் வந்து நீங்கள் என்ன ஒருநாள் விருந்துண்ணப்போகிறீர்களா?" என்றாள் எமிலி வினயத்துடன். அவள் பார்வையில் ஒரு வீச்சு இருந்தது.

"ஏன் வரமாட்டேன்? உன்னைப்போன்ற ஒரு ரூபவதியின் அழைப்புக்கு மறுப்பும் உண்டா? விருந்து வெறும் வயிற்றை நிரப்புவதாக மட்டுமின்றி மனத்தை நிரப்புவதாகவும் இருக்க வேண்டும்" என்றான் வலிபுருடஸ்.

* * *

சாப்பாட்டு மேசையில் இன்னும் விருந்துப பட்சணங்கள் பரப்பப்படவில்லை. ஒருமெத்தையிட்ட சோபாவல் உட்கார்ந்து இன்னொரு சோபாவுக்கு காலை நீட்டிக்கொண்டு கிடந்தான் புருடஸ். தனது இலாகாவில் ஒரு சிப்பந்தியாக வேலைபார்க்கும் ஒருத்தியின் வீட்டில் இராக காலத்தில் இப்படி ஒரு நாட்டின் மந்திரி கிடக்கலாமா? அந்த உணர்வு அவனுக்குக் கிடையாது. ஒரு புட்டியை முழுதாகக காலி செய்துவிட்டான். இரண்டாவது புட்டியை உடைத்து ஒரு வெள்ளிக் கோப்பையில் எமிலி ஊற்றிக்கொண்டிருந்தாள். இந்த நிலையில் அறிவு மயங்கிக்கிடக்கும் புருடஸுக்கு மானம் ஏது? உணர்வு ஏது?

புருடஸின் வாய் எதையெல்லாமோ உளறிற்று. தரம் குறைந்த வார்த்தைகள் எல்லாம் அவன் வாயிலிருந்து புறப்பட்டன.

எமிலி வெள்ளிக் கோப்பையை நீட்டினாள் கோப்பையைப் பிடிப்பதற்குப் பதிலாக அவள் கையைப் பிடித்தான் புருடஸ்.

இந்த நேரத்திலே வெளியில் குதிரைகளின் குளம்படிச் சத்தம் கேட்டது.

"விடு, கையை" யென்று வீரிட்டுக் கத்தினாள் எமிலி. புருடஸ் திகைத்தான். எமிலியின் வேலைக்காரி காலிப் புட்டிகளையும் மதுக் கோப்பையையும் மின்வேகத்தில் அப்புறப்படுத்தினாள்

சக்கரவர்த்தி ஷெரிடன் அடிக்குமேல் அடிவைத்து அங்கு வந்தான். அவன் பார்வையில் உக்கிரம் காணப்பட்டது. அவன் பின்னால் யுத்த இலாகாவின் நிரந்தரக் காரியதரிசி காணப்பட்டான். தளபதி லாசன் தாடைக்குள் சிரித்துக்கொண்டு ஒரு குள்ள நரியைப்போல் முன்னேறினான்

"நீர் ஒரு நாட்டின் மந்திரியா?" டல்லைக் கடித்துக் கொண்டு உறுமினான் ஷெரிடன்.

எத்தனையோ மந்திரிகள் புருடஸைவிடக் கேவலமாக நடந்துகொண்டிருக்கிறார்கள் ஆனால் அவர்கள் பிடிபடவில்லை. பிடிபடும்படி நடந்துகொள்ளவில்லை. அவர்களைப் பிடித்து தண்டிக்க வேண்டுமென்ற சதியும் நடைபெறவில்லை. ஆனால் பாவம் புருடஸின் கதி இப்படியாயிற்று மதுவும் மங்கையும் அவனை மானம் கெடுத்துவிட்டன.

"என்ன சொல்கிறாய்?" என்றான் ஷெரிடன். "சொல்வதற்கு என்ன இருக்கிறது? இதோ என் ராஜினாமாவைப் பிடி" என்றான் புருடஸ்.

* * *

புருடஸின் ராஜினாமாச் செய்தி காட்டுத் தீயெனப் பரவியது. கிரேக்கம் திகைத்தது. லாசன் மகிழ்ந்தான். ராஜினாமாவின் காரணம் அறியாதார் புருடஸைத் தீரன், தியாகி என்று புகழ்ந்தார்கள். புருடஸ் புழுங்கினான். ஆனால் எமிலி?

* * *

தான் வாக்களித்த வைர அட்டிகையைக் கையில் வைத்துக்கொண்டு தளபதி லாசன் எமிலியை எதிர்பார்த்திருந்தான. எமிலி வரவில்லை எமிலியின் ஏவலாள் வந்தான்.

"எமிலி எங்கே?" என்றான் தளபதி

"எமிலி எங்கே?" என்று பதிலுக்கு கேட்டான் ஏவலாளன், ஏக்கத்தோடு

"எமிலி எங்கே?" என்று கிரேக்க தேசமே கேட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ புதிய வரவு செலவுத் திட்டம் வெறும் புஸ்வாணம்

## உருப்படிச் செலவுகளுக்கு வெட்டு ஊதாரிச் செலவுகளுக்கு தாராளம்

அரசாங்க பட்ஜெட் கடைசி விநாடி வரை ஒரு இரகசியமாக இருக்கவேண்டிய ஒரு தஸ்தாவேஜாகும். நிதி மந்திரி தனது பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் வரை, அதன் இரகசியங்கள் பாதுகாக்கப்படவேண்டும். இல்லையேல், இரகசியங்கள் வெளியாகி, வர்த்தகர்களும் முதலாளிகளும் பொருட்களைக் கள்ள மார்க்கட்டுக்கு அனுப்பியும், பதுக்கிவைத்தும் ஜன விரோதச் செயல்களில் ஈடுபட்டு விடுவார்கள்.

இந்த இரகசியங்கள் நிதி மந்திரி பட்ஜெட்டை சபையில் சமர்ப்பிக்கும்போது அம்பலமாகி விடுமாதலால், அன்று விஸிட்டர்கள் காலரியில் இரகசியங்களை அறிய மக்கள் ஆவலுடன் குழுமியிருப்பார்கள். ஆனால் இம் முறை நிதி மந்திரி திரு ஜெயவர்தன 1952-53 நிதி வருடத்தின் பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் வாசிக்கும்போது, விஸிட்டர் காலரியில் ஏனோ அதிக கூட்டமில்லை. ஒருவேளை இந்தப் பட்ஜெட் இரகசியத்தில் எந்த இரகசியமும் கிடையாதென்ற இரகசியம் முன்கூட்டியே அவர்களுக்குத் தெரிந்துவிட்டதோ என்னவோ? இரகசியமில்லாத இரகசியமாகிவிட்டது இந்த பட்ஜெட்.

காலம் சென்ற பிரதமருக்கும், அவரது சேவைகளுக்கும் புகழ்மாலை சூட்டுவதிலும், கொழும்புத் திட்டத்தையும் தங்களின் கடந்த 5 வருட சாதனைகளையும் சண்டப் பிரசண்டம் செய்வதிலும் நிதி மந்திரி தனது பட்ஜெட் பிரசங்கத்தில் 80 நிமிட நேரத்தை வீணாக்கிவிட்டார்.

பட்ஜெட்டில் ரூ $3\frac{1}{2}$ கோடி துண்டு விழுகிறது. இதனைச் சமாளிக்கும் வழி பட்ஜெட்டின் கடைசியில் $3\frac{1}{2}$ வரிகளில் விளக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இதுவரை செலவு செய்யப்படாமலிருக்கும் க்ஷேமிப்பு நிதியிலிருந்து துண்டு விழும் தொகையைச் செலவிடுவது. பொதுத் தேர்தல் சமயத்தில் யு. என். பி. மந்திரிகள் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள், கவர்னர்-ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்தில் கண்ட திட்டங்கள் முதலியவை புதிய பட்ஜெட்டில் இடம் பெறவில்லை. வாக்குறுதிகள் என்றும் வாக்குறுதிகளாகவே இருக்கும்போலும்!

### இல்லை, இல்லை

பட்ஜெட்டில் புதிதாக ஒன்றுமில்லை. புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அதில் இடமில்லை. சாமான்களின் விலைவாசிகளில் மாற்றமில்லை. வாழ்க்கைச் செலவைக் குறைக்க வழி காட்டப்படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க திட்டத்தைக் காணோம். தேர்தல் காலத்தில் பறைசாற்றப்பட்ட 'தேசிய பாஷைகளை அரசாங்க மொழிகளாக்குவோம்' என்ற வாக்குறுதியை நிறைவேற்ற எந்த ஏற்பாடும் பட்ஜெட்டில் இல்லை. தேசிய மொழி வளர்ச்சிக்குத் தனி இலாகா நிறுவவேண்டுமென தேசிய பாஷைக் கமிஷன் சிபார்சு செய்திருந்தும், நிதி மந்திரி அந்தப் பிரச்னையை அடியோடு கைவிட்டுவிட்டார்.

மக்கள் நலனுக்கு அத்தியாவசியமான செலவுகள் குறைக்கப்பட்டு, அவசியமற்ற செலவுகளுக்கு அதிகமான தொகை பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆயுர்வேத வைத்தியத்தை அபிவிருத்தி செய்தல் யு. என். பியின் முக்கியமான ஒரு தேர்தல் வாக்குறுதியாகையால் நாட்டு வைத்திய முறைக்கு நல்லகாலம் பிறக்குமென்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் யு. என். பி. பட்ஜெட் அவர்களை ஏமாற்றிவிட்டது. சுகாதார சேவைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ 8 97 33 040ல் ரூ 10 53,336 மட்டுமே ஆயுர்வேதத்திற்காக அளிக்கப்பட்டிருக்கிறது. யு. என். பி ஆட்சியாளர் நாட்டு வைத்தியத்தை அபிவிருத்தி செய்யும் லக்ஷணம் தான் இது.

### ஏழைகளின் கதி

அனாதைக் குழந்தைகள், வயோதிகர்கள், விதவைகள் முதலிய அரசாங்கத்தின் ஆதரவை எதிர்நோக்கும் லட்சக் கணக்கான அனாதைகளுக்கு உதவிபுரிவதற்காக கடந்த பட்ஜெட்டில் ரூ 93,32 950 அளிக்கப்பட்டது. ஆனால் புதிய பட்ஜெட்டில் ரூ. 90 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத் தொகை அதிகரிக்கப்பட வேண்டியிருக்க, குறைக்கப்பட்டிருக்கிறது.

வரி விதிப்பு கிடையாது என்று படாடோபமாகப் பேசினாலும், ஏழைகளின் தலையில் கையை வைக்க பட்ஜெட்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அரிசி விலையைக் கூட்டுவது அல்லது ரேஷன் அரிசி அளவைக் குறைப்பது என்பதுதான் அந்த ஏற்பாடு. ஆனால் அந்த கசப்பான திட்டத்தை இப்பொழுது வெளியிட்டு, மக்களின் அதிருப்தியைத் தேடிக்கொள்ள நிதி மந்திரி விரும்பவில்லை. பின்னர் நடைமுறையில் இப் பளு மக்கள்மீது சுமத்தப்படும். நடைமுறையிலிருக்கிறபடி அரிசி வாங்குவதற்காக ரூ. 25,50,00,000 அதிகப்படியாகச் செலவிடப்பட்டது. ஆனால் புதிய பட்ஜெட்டில் அதற்காக ரூ 16 10 00,000 மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவு அரிசி விலையைக் கூட்டுவது அல்லது பங்கீட்டு அரிசி அளவைக் குறைப்பதுதான் என்பது நிச்சயம். இதனால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறு மக்களின் வயிற்றில் மண்ணடிக்கும் முறையில் அத்தியாவசியமான செலவுகள் குறைக்கப்பட்டிருந்தாலும், கடந்த பட்ஜெட்டைவிட அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கும் செலவினங்களையும் சிறிது ஆராய்வோம்.

### ஊதாரிச் செலவுகள்

அயல் நாடுகளில் குஷியாக டம்ப வாழ்வு நடத்தும் இலங்கை ஸ்தானீகர்களுக்கு பொது மக்களின் வரிப் பணத்திலிருந்து லட்சக் கணக்கில் வாரியிறைக்க யு. என். பி. அரசாங்கம் என்றுமே பின் வாங்கியதில்லை. வெளிநாடுகளிலிருக்கும் ஸ்தானீகர்களின் செலவுகளுக்கு கடந்த பட்ஜெட்டில் ரூ. 27 91,753 ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய பட்ஜெட்டில் ரூ. 34,17,661 அளிக்கப்பட்டிருக்கிறது. கவர்னர்-ஜெனரலுக்காக சென்ற பட்ஜெட்டில் ரூ 5,02,517 ஒதுக்கப்பட்டது. ஆனால் புதிய பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 5,38,187. பிரதம மந்திரிக்காக புதிய பட்ஜெட்டில் ரூ. 2,73,234 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடப்பு வருடத்தில் அவருக்காக ரூ. 2,26,112 மட்டுமே அளிக்கப்பட்டது.

பட்ஜெட்டில் வரவு மிகக் குறைந்திருப்பதும், துண்டு விழும் ரூ. $3\frac{1}{2}$ கோடியைச் சரிக்கட்ட க்ஷேம நிதியில் கையை வைக்கப்போவதும், நாட்டிலே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுவருகிறது என்பதைத்தான் நிரூபிக்கின்றன. சர்க்காருக்கு நல்ல வரவு வந்த சுபீட்சமான காலம் முடிவடைந்துவிட்டது தான் வரவு குறைந்ததின் அர்த்தம். நெருக்கடியான சமயத்தில் உதவுமென்பதற்காக "செழிப்பான" காலத்தில் ரூ. 17 கோடிவரை சேமித்து வைக்கப்பட்டது. அதைக் கரைக்க முற்படுவது நெருக்கடி ஆரம்பமாகிவிட்டதென்பதைத்தான் காட்டுகிறது. யு. என். பிக்கு வாக்களித்தால் நாட்டில் பாலும் தேனும் கலந்தோடும் என்று தேர்தல் மேடைகளில் வாய்ப்பறை போட்டதெல்லாம் சுக்கு "ஹம்பக்" என்பதை பட்ஜெட் படம் பிடித்துக் காட்டிவிட்டது.

### ஆறு வருடத் திட்டம் அரோஹரா

புதிய வரிகள் கிடையாது என்பதெல்லாம் வெறும் செப்படி வித்தை. வரி கிடையாதென்றால் மக்கள் மகிழ்ந்து விடுவார்களென்பது மந்திரியின் எண்ணம். அதற்குப் பதிலாக பண மூட்டைகள்மீது அதிக வரி விதித்து, அவர்களிடமிருந்து பணத்தை வசூலாக்கி அபிவிருத்தி வேலைகளுக்கு உபயோகிக்கவேண்டுமென்பதே மக்களின் கோரிக்கை. அரசாங்கத்தின் ஆறு வருடத் திட்டம் அடுத்த வருடம் பூர்த்தியாகிவிடுமென்றும், அதன் பின்னர் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் நிதி மந்திரி பட்ஜெட் பிரசங்கத்தில் கூறினார். ஆறு வருடத்திட்டம் பூர்த்தியான பிறகுதான் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்றால், இத்திட்டந்தான் எதற்காக என்று கேட்கின்றோம். ஆறு வருடத்தில் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆனால் அதனால் இதுவரை கிடைத்த பயன் பூஜ்யந்தான். ஆறு வருடம் பூர்த்தியான பிறகும், உணவுப் பொருட்களுக்காக இலங்கை அயல்நாடுகளிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிலைமைதான் நீடிக்குமென்பதில் சந்தேகமில்லை. பிரமாதமாகப் பறைசாற்றப்பட்ட யு. என். பியின் ஆறு வருடத் திட்டம் பிசுபிசுத்துவிட்டதென்பதை நிதி மந்திரியின் பட்ஜெட் பிரசங்கம் தோலுரித்துக் காட்டிவிட்டது.

### சுதந்திரன் சந்தா விபரம்

| | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| 1 வருடம் | 8-00 | 8-0-0 |
| 6 மாதம் | 4-50 | 4-8-0 |
| தனிப் பிரதி | 0-15 | 0-2-6 |

சந்தா முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். பத்திரிகை உள்ளூரில் சனிக்கிழமைகளில் கிடைக்கும்படி தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194 ஏ, தட்டார் தெரு, கொழும்பு-12

மிக்காடோவின்
ஓடிகொலோன்
வலிமை மிகுந்தது.
உடை அணியும்போதும், நோயாளிகள் அறைக்கும் விசேஷமானது.
மிக்காடோ அன் கோ,
டாம் ஸ்ட்ரீட், கொழும்பு.
போன்: 3242.


சூரியனைக் கண்ட பனி
அன்புசால் ஐயா,
தங்கள் நேத்திரா அமிர்த தைலம் என்ற திவ்விய தைலத்தை உபயோகித்ததின் பயனாக, சுமார் ஐந்து வருடங்களாக என்னைப் பீடித்திருந்த தலைப்பாரம், கண்ணெரிவு, ஜலதோஷம் முதலியன எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல், அற்றுவிட்டன.
இங்ஙனம்,
இடல்கஸ்ஹின்ன, M. K. சூரியன், ஆசிரியர்.
சகலவிதமான உஷ்ண வியாதிகளுக்கும், பித்த கிறுகிறுப்பு, அசதி, சோம்பல், தூக்கமின்மை, கண்ணெரிச்சல், பீனிசம், நீர்வடிதல் அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல் முதலிய வியாதிகளுக்கு, ஓர் அமிர்தம் போன்ற தைலம். கூந்தல் அழகாகவும், கருப்பாகவும் வளரும்.
புட்டி விலை ரூ. 2-50. தபால் செலவு சதம் 75-
எமது சப் ஏஜண்டுகள்
எஸ். கே. முருகேசு, மார்க்கெட் 33, 34, கண்டி.
நெ. செ. மு. முகம்மது அப்துல்லா, கல்பிட்டி:
ஆர். ஏ. குருசாமி செட்டியார் அன் பிரதர்ஸ்,
73, பஜார் தெரு, பசறை.
மொடர்ன் டிரேப்பரி ஸ்டோர்ஸ்,
29, ராஜ வீதி, மாத்தளை
பட்டியகம டிரேடிங் கம்பெனி, கெல்தொட்ட.
சோல் ஏஜண்ட்ஸ்:
செல்லராஜா அன் கோ.
பாக்கியலெக்ஷிமி வைத்தியசாலை
70, செட்டியார் தெரு கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற வாரத் தொடர்ச்சி)

# ரஞ்சிதம்

மாயாவி




## கல்லூரிக் காதலர்கள்

பட்டதாரிகள் என்ற புத்தகப் பூச்சிகளை உற்பத்தி செய்யும் இலங்கை சர்வ கலாசாலைக்கு வலது புறத்தில் நீண்டு கிடக்கும் தார் ரஸ்தாவிலே மோட்டார் கார்கள் சாரியாகச் சென்று கொண்டிருந்தன. பிற்பகல் மணி நாலு இருக்கும். என்றாலும் இன்னும் வெய்யில் நன்ருக எரித்துக் கொண்டிருந்தது. ரஸ்தாவின் இருபுறமும் நிரைக்கு வைக்கப்பட்டிருந்த மரங்கள் மேலே கவிந்து கூடவிட்டிருந்தன. கிளைகளினூடே புகுந்த சூரிய கிரகணங்கள் ஆங்காங்கே தார் ரோட்டில் படிந்து மயில் தோகை போல் கோலமிட்டவண்ணம் காணப்பட்டன.

ரஸ்தாவின் வல ஓரத்தை அடுத்து ஒரு யுவதி கால் நடையாகச் சென்று கொண்டிருந்தாள். அவளது இடதுகரம் பருமனை மூன்று புத்தகங்களை மார்போடு அணைத்துப் பிடித்துக் கொண்டிருந்தது. மஞ்சளும் நீலமுமாக வரியிட்ட ஜாக்கெட்டும் பூநீல ஜோர்ஜட் சாரியும் அணிந்திருந்தாள். பசையிட்டு ஒட்டப்பட்டதுபோல் உடலோடு உடலாகச் சுற்றப்பட்டிருந்த அந்த தூல்லியமான சேலையின் தலைப்பு அடிக்கு அடி காற்றில் சிலாவிக் கொண்டு பறந்தது.

மிதமான உயரமுள்ள ஒரு குதிச் சப்பாத்தை அவள் காலில் அணிந்திருந்தாள்: கம்பளத்தில் நடக்கும் விலை உயர்ந்த அந்த சப்பாத்தை யாரும் தெருவில் நடந்து போவதற்கு உபயோகிக்க மாட்டார்கள். எனவே அவள் காரில் போகக் கூடிய அந்தஸ்து வாய்ந்த வனிதாமணி என்பதும் இன்று ஏதோ அகஸ்மாத்தாக கால் நடையில் செல்கிருள் என்பதும் புலனுயிற்று.

அவள் அவசரமாக நடக்கவில்லை. அடியின் மேல் அடியெடுத்துவைத்து அன்ன நடைதான் நடந்தாள். அடிக்கு அடி தென்றற் காற்றில் அசையும் மலர்க்கொடிபோல் அவள் கொடியுடல் துவண்டது.

தெருவில் போகும் போது—அதுவும் பெண்கள்—அடிக்கடி பின்னல் திரும்பிப் பார்ப்பது சரியல்லவென்பதை அவள் அறியாதவளல்ல. எனினும் மனம் கேட்காதவள்போல் நான்கு எட்டுக்கு ஒரு முறை திரும்பித் திரும்பிப் பார்க்கலானுள். அவளுடைய மான் விழியில் யாரையோ எதிர் பார்க்கும் அங்கலாய்ப்பு பிரதிபலித்தது.

ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். கண்ணுக்கெட்டிய தூரம்வரை கார்கள் வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருந்தன. ஆ, அது யார்? யாரோ ஒருவன் வெகு தொலைவில் சைக்கிளில் வேகமாக ஓடி வருவது தெரிந்தது. அவள் முகத்தில் நிறைவு காணப்பட்டது. அதன்பின் அவள் திரும்பவும் இல்லை பார்க்கவும் இல்லை. நடையில் சற்று வேகத்தைக் கூட்டிக் கொண்டாள்.

"ஹெலோ, ரஞ்சி!" அந்தப் பெண்மணிக்கு பின்னல் சுமார் ஐந்து யார் தூரத்திலிருந்துதான் அந்த வாஞ்சை நிரம்பிய அழைப்பு வந்தது. எனினும் சற்று முன்பு நிமிஷத்திற்கு நான்கு தடவை திரும்பித் திரும்பிப் பார்த்து வந்த அவள் இப்போது ஒரு முறைகூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

"எக்ஸ்கியூஸ்மி, ரஞ்சி" என்று சொல்லிக்கொண்டே இருபத்தாறு முதல் இருபத்தெட்டுவயது மதிக்கக்கூடிய ஒரு இளைஞன் அந்தப் பெண்ணின் ஓரமாக சைக்கிளை விட்டான் சைக்கிளில் இருந்தபடியே இரண்டு சப்பாத்துக் கால்களையும் ரோட்டில் உராய்ந்து கொண்டு சைக்கிளை நிறுத்தினுன்.

அந்தப் பெண்ணும் நின்ருள். ஆனல் அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை அந்த வாலிபனின் கையிலிருந்த சிகரட் விரலுக்குள் வரை எரிந்து தீர்ந்துவிட்டது என்றாலும் அதை எறிந்துவிட அவனுக்கு மனம் வரவில்லை. இரண்டு விரல்களால் அதைக் கிள்ளிப் பிடித்து "ஸ்" என்ற சத்தத்தோடு ஒரு கடைசி இழுவையை இழுத்து விட்டு அந்த அடிக்கட்டையைக் கீழேபோட்டு அதன் மேல் சப்பாத்துக் காலை வைத்தான்.

"கோபமா, ரஞ்சி?" என்று கேட்டான். அவள் நிமிர்ந்துபார்த்தாள். அவன் வாயிலிருந்து கபகப என்று சிகரட் புகை சுருளாக வந்துகொண்டிருந்தது.

"உங்களைவிட இலங்கை அரசாங்கத்தின் ரயில் பரவாயில்லை" என்ருள் பொய்க் கோபம் ஒன்றை முகத்தில் வரவழைத்துக் கொண்டு.

"ரயில் வண்டிமாதிரி நான்புகையை கக்குகிறேன் என்றுதானே நீ இப்படிப் பேசுகிருய்? உனக்கு சிகரட் பிடிக்காது. அது எனக்குத் தெரியும். ஆனல் நான் என்ன செய்யட்டும்? உங்க அப்பா பிரபல சுருட்டு முதலாளிதான். கையன்ன ருனு ருனு ஆனு சுருட்டு உலகப் பிரசித்திபெற்றது. அந்த சுருட்டையே ஆதரிக்கலாம் என்றல் அதை முகத்தின் முன்னல்கூட எடுக்க முடியவில்லையே. பிரம்மா புகையிலையைப் படைத்தார். ஆதிகாலப் புகைப் பிரியர்கள் சுருட்டைப் படைத்தார்கள். அந்த சுருட்டு அப்படியே பழைய சனுதனிகளைப் போல் எள்ளளவும் மாறுதல் இல்லாமல் இன்று வரை சகிக்க முடியாத சுகந்தத்துடன்தான் இருந்து வருகிறது. ஏன், பணத்தில் கிடந்து புரளும் உங்க அப்பா சுருட்டு வியாபாரத்தை மூடிவிட்டு ஒரு சிகரட் தொழிற் சாலையை ஆரம்பித்தால் என்ன? நாங்கள் எல்லாம் ஆதரிக்கமாட்டோமா?"

எப்போதுமே அந்த வாலிபன் கிண்டலாகவும் கேலியாகவும் பேசுவதில் சமர்த்தன். நாவல்களில் வரும் இலட்சியவாதிகளைப் போல் சகல நற்குணங்களும் படைத்த அவனிடம் அந்தப் பெண்ணுக்கு இருந்த ஒரே குறை அவன் சிகரட் புகைப்பதுதான். இலங்கையின் குளிர்ப் பிரதேசத்தில் வாழ்பவனுகையால் இந்தப் புகைப் பழக்கம் அவனுக்கு வந்துவிட்டது.

"உங்கள் புகையைப் பற்றி நான் இப்போது குறிப்பிடவில்லை. நீங்கள் வந்த நேரத்தைத்தான் குறிப்பிட்டேன். இலங்கை அரசாங்கத்தின் ரயில் இரண்டு மணிக்கு வருகிற தென்றல் நாலு மணிக்காவது வந்து சேரும். நீங்கள் ஒரு மணிக்கு வருவதாகச் சொல்லிவிட்டு இப்போதுதான் வந்திருக்கிறீர்கள். இந்த தெருவில் நான் எத்தனை தடவை முன்னும் பின்னுமாக நடந்து விட்டேன தெரியுமா?"

"ஐயோ, ரஞ்சிதம் என்னை மன்னித்துவிடு. எதிர் பாராத ஒரு இடைஞ்சல் ஏற்பட்டு விட்டது" என்று கெஞ்சலாகக் கேட்டான் அந்த வாலிபன்.

ரஞ்சிதமும் சுந்தரமும் காலேஜ்காதலர்கள் கிறீன் எஸ்டேட் மாரிமுத்துக் கங்காணியின் மகன் சுந்தரம். ரஞ்சிதம் அம்பலவாணரின் ஏக புதல்வி. வெறுமனே அம்பலவாணர் என்ருல் யாருக்கும் தெரியாது ஆதியில் அவர் சுருட்டுக்கடை அம்பலவாணராய் இருந்தார். யுத்தத்திற்குப் பிறகு அரிசி மூட்டை அம்பலவாணரென்றல் கொழும்புமா நகரில் எல்லோருக்கும் தெரியும் அத்தகைய பெரும் புள்ளி அவர்.


அம்பல வாணர் சிறுடையனுக இருந்தபொழுது ஐந்தாம் வகுப்பில் இரண்டு வருடம் மட்டையடித்தும் அதைத் தாண்ட முடியாமல் தகப்பனரின் பிரம்பம் பழத்துக்குப் பயந்து யாருக்கும் தெரியாமல் கொழும்புக்கு ஓடிவந்து அஞ்சுலாம் படிச் சந்தியிலிருந்த ஒரு சுருட்டுக் கடையில் சில்லரைச் சிப்பந்தியாகச் சேர்ந்தான் அதிலிருந்து படிப்படியாக உயர்ந்து அம்பலவாணர் அக்கடையின் முதலாளியானுர். இப்படியிருக்கையில் மகானுபாவன் ஹிட்லரின் புண்ணியத்தால் இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பித்து ஜப்பானிய விமானங்கள் கொழும்பை எட்டிப் பார்த்து விட்டுச் சென்றன. அதிலிருந்து அம்பலவாணருக்கு யோகமடித்தது. மிலிட்டரிச் சாமான்களை ஒழிவு மறைவாக வாங்கி விற்றும் அரிசி, கொச்சிக்காய், வெங்காயம், கிழங்கு போன்ற சாமான்களை மூட்டை மூட்டையாக பதுக்கி வைத்து கள்ளமார்க்கெட்டில் விற்றும் நல்ல தட்டுத் தட்டினுர் அதனுல்தான் அவர் அரிசி மூட்டை அம்பலவாணரானுர். இவ்வளவெல்லாம் கொடுத்த இறைவன் அவருக்கு ஆண் சந்ததியைக் கொடுக்காமல், ஆசைக்கு ஒரு பெண்ணை மட்டுமே கொடுத்திருந்தார். அந்தப் பெண் படித்து சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை அவருக்குக் கிடையாது. மற்றப் பணக்கார வீட்டுப் பெண்களைப் போல தனது பெண்ணும் சர்வகலாசாலையில் படித்து ஒரு பி. ஏ பட்டத்துடனே அல்லது எம். ஏ. பட்டத்துடனே வரட்டுமே என்றெண்ணி சர்வ கலாசாலையில் சேர்த்துவிட்டார். ரஞ்சிதம் சேர்ந்த அதே வருடத்தில்தான் சுந்தரமும் அதே இண்டர் வகுப்பில் சேர்ந்தான்.

குறும்புத்தனம்தான் காதலுடன் கூடப்பிறந்த தாச்சே. சுலபத்தில் கல்யாணம் செய்து கொள்ளக் கூடியவர்களிடையே அது தைவரிசையைக் காட்டாது. எங்கு முட்டுக்கட்டை அதிகமாக இருக்குமோ அங்குதான் காதல் தனது லீலைகளை ஆரம்பிக்கும் சுந்தரம் இலங்கை இந்தியன். ரஞ்சிதம் யாழ்ப்பாணத்துப் பெண். யாழ்ப்பாணத்தவர்கள் இந்தியரோடும் இந்தியர், யாழ்ப்பாணத்தவரோடும் சம்பந்தம் வைத்துக் கொள்வது எளிதான காரியமல்ல. இதைத் தெரிந்துகொண்டுதானே என்னமோ காதல் தனது திருஷ்டியை சுந்தரத்தின்மீதும் ரஞ்சிதத்தின் மீதும் ஏக காலத்தில் திருப்பிவிட்டது. அவ்விருவரும் ஒருவரை ஒருவர் மனப்பூர்வமாக காதலித்தனர். அவர்களின் படிப்பும் காதலும்போட்டி போட்டுக் கொண்டு முன்னேறின.

பி. ஏ. பரீக்ஷையும் முடிந்து விட்டது. மாணவர்கள் தத்தம ஊருக்குத் திரும்புவதற்கு மூட்டை முடிச்சுகளையும் பெட்டி படுக்கைகளையும் சித்தம் செய்கினறனர். பெற்ருேரையும் சகோதர சகோதரிகளையும் காணத் துடிக்கின்றனர் சிலர் ஆசையுடன் எதிர் பார்த்திருக்கும் காதலிக்குக் கொடுப்பதற்கு என்ன சாமான் வாங்கிக கொண்டு போகலாமென்ற சிந்தனையிலிருக்கின்றனர் சிலர். ஹாஸ்டலிலும் போர்டிங்கிலும் உப்புச் சப்பில்லாத உணவைச் சாப்பிட்டு வந்தவர்கள் ஊரில் தம்மை எதிர் நோக்கியிருக்கும் ஊறுகாய் ஜாடியையும் கட்டித் தயிரையும் நினைத்து வாயை சப்புக் கொட்டிக் கொண்டனர் பட்டண வாழ்க்கையில் அலுப்புத் தட்டியவர்கள் கிராமத்து இயற்கை வளங்களைக் காணவும் அனுபவிக்கவும் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர்.

இவ்வளவு காலமும் பாட்டும் படிப்பும் எதிரொலித்துக் கொண்டிருந்த சர்வ கலாசாலைக கட்டிடத்தில் நாளைக்கு மரண நிசப்தம் குடிகொண்டுவிடும். இத்தனை நாளும் வாலிபர்

(12ம் பக்கம் பார்க்க)




"ஐயோ, ரஞ்சிதம் என்னை மன்னித்துவிடு. எதிர்பாராத ஒரு இடைஞ்சல் ஏற்பட்டுவிட்டது" என்று கெஞ்சலாகக் கேட்டான் அந்த வாலிபன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அராபிய விஞ்ஞானம் அழிந்ததேன்?

(பேராசிரியர் அப்துல் ரஹ்மான்கான்)

முஸ்லிம் விஞ்ஞான முறைக்கு தாம் மிகவும் கடமைப்பட்டிருப்பதாக உணரும் விஞ்ஞானிகள் பலரும் அவ்விஞ்ஞானத்தின் திடீர் வீழ்ச்சிக்குரிய காரணம் யாதென ஆராய ஆரம்பித்தனர். எட்வர்ட் சாக்ஷா என்னும் ஆர்வமிகு ஜெர்மன் ஆசிரியரும் அபூரஹ்மான், அல்பரூனி போன்ற ஆசிரியர்களின் கூற்றுக்கு விளக்கம் கூறுபவரான அவர் தமது பதினைந்தாவது நூற்றுண்டும் அதன் பிறகும் என்னும் நூலில் அரேபிய சமுதாயம் அல்அஷாரி, அல்கஜ்ஜாலி, இவர்களுக்கு பதிலாக கலிலியோக்களையும் கெப்ளர்களையும், நியூடன்களையும் கொண்டதாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென்பதாகக் கூறுகின்றூர். மற்றொரு ஆசிரியரான ஜான் சார்ட்டன் என்பவா விஞ்ஞான வரலாறும் தததுவமும் என்ற நூலில் முஸ்லிம் விஞ்ஞானிகள் இயற்கை விதிகளை பின்பற்றியதாகக் கூறுகின்றூர். இவா இமாம் கஜ்ஜாலியின் போதனையால்தான இஸ்லாமியர்கள் விஞ்ஞானததை மட்டும் விட்டு வேதாந்ததைதப பின்பற்றினாகள் என்பதை ஒததுக்கொள்ளவில்லை இமாம் கஜ்ஜாலி அவர்களை இவர் காலமெலாம் போற்ற வேண்டிய மெஞ்ஞானி என்று கூறுகின்றூர் சாதாரண மாறுதலான இயற்கையின் சுழற்சியில்கூட வளர்ப்பும், இறப்பும், ஏற்படத்தான் செய்கிறது.

அரேபிய விஞ்ஞானம் தொடர்ந்தடித்த போர்ப் புயலாலும் மாறி மாறி வந்த அரசாங்க மாறுதலாலும் மாய்த்தொழிந்ததென்றுலும் இது தார்த்தாரிகளின படையெடுப்பால் வெகுசீக்கிரம் அழிந்துவிட்டது. அரேபிய விஞ்ஞானம் இயற்கையாக இழந்துவிடவல்லை; இஸ்லாமிய எதிரிகளானகாட்டுமிராண்டிகளால் கொலை செய்யப்பட்டுவிட்டது. தார்த்தாரிகள் சிலுவை யுத்தக்காரர்கள் சென்ற பிறகு தொடர்ந்து மக்களை பலிகொண்டு வந்த பிளேக் காலரா பஞ்சம்போன்றவைகள் முஸ்லிம்களின் விஞ்ஞான வளர்ச்சியை பாதித்து வந்தன. மேலும் முஸ்லிம் எதிர்ப்புணர்ச்சி கொண்ட கூட்டங்கள் இஸ்லாமிய மேதைகளை இரகசியமாக கொலைசெருழிப்பதற்கு சபதமெடுத்துக் கொண்டனர். இத்தகைய கொடூரமான செய்கைகளுக்கு ஒரே ஒரு உதாரணம் சொல்லலாம். பிரசித்திட்பெற்ற மதரஸாயே நிஜாமியாவை பக்தாதில் ஸ்தாபித்தவரும் வெற்றி வீரர்களாகத் திகழ்ந்த சலுஜக்கல்த்தான்களின் மந்திரியாக விளங்கியவருமாகிய தஸ்நிஜாமுல்க் என்னும் மாபெரும் அறிஞரை இத்தகைய எதிர்ப்புணர்ச்சிக் கொண்டவர்கள் இரகசியமாக கொலை செய்துவிட்டதுதான். இடர் சூழ்ந்த சூழ்நிலையில் எந்தக் கலையும் எவ்வாறு வளரும்.

முஸ்லிம்களின் அரசியல் அதிகாரம் அழிந்தவுடன் முஸ்லிம் நாடுகளில் விஞ்ஞான அறிவு குன்றியதுடன் மீண்டும் உயர்நிலை எய்துவதற்குரிய பிரச்சாரமும் செய்யப்படவில்லை. இந்நிலைதான் இதுவரை நீடித்து வந்திருக்கிறது. விஞ்ஞானத்தை தங்கள் முன்னைய வரலாற்றில் கண்டிராத பல நாடுகள் இன்று வெகுதூரம் முனைந்து நிதிக் கூட்டுறவுமூலம் விஞ்ஞானத் துறையில் வளர்ச்சியுற சதா முயற்சித்துக்கொண்டிருக்கின்றன. ஆனுல் ஒரு காலத்தில் விஞ்ஞானத்தின் தீபமேந்திகளாக திகழ்ந்த முஸ்லிம் நாடுகள் இன்னும் பின்னணியிலேயே உள்ளன. சுயமான விஞ்ஞான ஆராய்ச்சியின்றி எந்த நாடும் கைத்தொழிலில்—வாழ்க்கை நிலையில் முன்னேருது. நீராவி சக்தியை, மின்சார பலத்தைச் சேமித்து பயன்படுத்திக் கொளளாத காரணததால் பலம்வாய்ந்த முஸ்லிம் நாடுகளெல்லாம் முனனேற்றத்தின் அடிச்சுவட்டைகூட பின்பற்ற முடியவில்லை. இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு இதுதான் நேரம். பௌதிகம் ரசாயனம் ஆகிய துறைகளில் உலக நாடுகள் அனைத்தும் மும்முரமாக கவனஞ் செலுத்தி வருகின்றன. எகிப்தும் தன்னிடத்திலுள்ள பல்கலைக் கழகங்களின் மூலம் கவனம் செலுத்தி வருகின்றது. சமாதான முயற்சிக்காக துருக்கிய குடியரசும் அணு ஆராய்ச்சியில் வெகுதூரம் முன்னேறி வருகிறது. பாகிஸ்தானும் அண்டைய நாடான பாரதத்தின் சுறுசுறுப்பை பின்பற்றி ஆர்வமும் எழுச்சியும் படைத்த இளைஞர்களை ஐரோப்பா அமெரிக்காபோன்ற நாடுகளுக்கு ஏராளமாக அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறது நாடெங்கும் விஞ்ஞான பரிசோதனைச்சாலைகளையும் ஸ்தாபித்து வருகிறது. வெகுசீக்கிரத்தில் ஆசியாவிலேயே பெரிய அணு ஆராய்ச்சி நிலையமொன்று தகுதியான நிபுணர்களால் இது நிர்வகிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கலாம்.

—இஸ்லாமிக் லிடரேச்சர்




# எளிய வாழ்க்கையும் இஸ்லாமும்

எமது இஸ்லாத்தின் திருநபியாம் முஹம்மத் (ஸல்) அவர்கள் போதனைகளெல்லாம் எளிய வாழ்க்கையையும் முறையையுமே போதித்துக்கொண்டிருக்கின்றன. அன்றியும் ரசூலுல்லாஹ் அவர்களுக்கெதிரேசென்ற,நிகழ்,எதிர்கால நிகழ்ச்சிகளெல்லாம் இருந்தன. தெய்வ ஞானத்தின் பயனும் மனிதாகளின் நிலை யாதாயிருக்கிறதென்பதையும் யாதாயிருக்க வேண்டுமென்பதையும் நன்குணர்ந்திருந்தார்கள். இந் நோக்கத்தைக்கொண்டேதான் ஒவ்வொரு விஷயத்தையும் உலக மன்பதைகளுக்கு ரசூலுல்லாஹ் உபதேசம் புரிந்து வந்தார்கள்.


குழந்தை திரேகத்தில்ஒன்றுமில்லாமலே ஜனனமாகின்றது. ஆனுல் தாய் தந்தையர் அதன்மீது ஆடை ஆபரணங்களையிட்டு அலங்கரிக்கின்றனர். மனிதன் எவ்வளவோ மகா உயரிய விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருப்பினும் அவ்வாடை குறிப்பிட்ட ஒரு சிறிது காலமே மனிதனுக்கு உபயோகப்படும் என்பது மறைவான விஷயமல்ல. அன்றியும் அகிலத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஆண், பெண், குழந்தை, வாலிபன், வயோதிகன் என்ற பாகுபாடில்லாமல் எல்லோரும் தனது திரேகத்தையே தனது அசல் ஆடையாய் நினைக்கின்றனர். வாழ்க்கைக்கு வேண்டிய ஆடையும் திரேகந்தான் என்று கருதுகின்றனர் திரேகததைக் கழுவி சுத்தப்படுத்தி நல்ல முறையில் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதையே தங்கள் ஜீவியத்தின் கடமையென்றும் நினைக்கின்றனர். இத்தகைய திரேகம் தன் ஆதி நிலையில் சுகமாயிருக்குமாயின் அதன்மீது எததகைய ஆடையை அணிவதும் சரிதான் திரேகம் தனது ஆதி நிலை சரியாயில்லையாயின் அதன்மீது எத்தகைய மேலான உடைகளை அணிவதனுலும் பிரயோஜனமொன்றுமேயில்லை

ஆதேமுறையாக சர்வசாதாரணமான ஆகார வகைகளே

(15-ம் பக்கம் பார்க்க)

இருமல் இளைப்பு சுகம்
T. B. & ASTHMA
இருமல், ஜுரம், உடம்பு இளைத்துவருதல், உள்ள க்ஷயரோகத்துக்கும், பீனிசம், தடுமன், இளைப்பு, ஏங்கல், மூச்சுத்திணறல், உள்ள சுவாச காசத்திற்கும் நிகரற்ற மருந்துகள். 20 வருட அனுபவத்தில் பல ஆயிரக்கணக்கான பேர்கள் சுகம்.
48நாள் தாளகபஸ்பம் சித்திரமூலசூரணம் ரூ 45-0-0
24 „ „ „ „ ரூ 22-8-0
பார்சல்செலவு ரூ 2-0-0. நோயைவிவரமாகஎழுதவும்
கேட்லாக் இனும்.
தண்டபாணி வைத்தியசாலை
பெரியகடை வீதி, பழனி. (S. I.)
THANDAPANI MEDICAL HALL PALANI (S. India)

ஆனந்தா
லேகியம்
முககிய கவனிப்பு:-
ஆனந்தா
வைத்தியசாலை
174,
எனற விலாசததுடன் இந்த அடையாளத்தைப் பாரத்துவாங்குங்கள்
ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தைசுகமாககழித்து, அசதி,சோம்பல், மேல் கால் கைகளுக் களில்வலி, அஜீரணம், பசியின்மை,பித்தவாய்வு,புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி,இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள்,சொறி,தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல்,கண் எரிச்சல்,உள்ளங் கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள்,வாதக் கடுப்புகள்முதலிய அநேக வியாதிகள் தீரும் பத்தியமில்லை
பெரியது விலை ரூ 5-75. சிறியது விலை ரூ 3-00
"ஆனந்தா கீழ்காய் நெல்லித் தைலம்" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்கு பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகட்கும் விபரமடங்கிய கேட்லாக இனமாக அனுப்புவோம்.
புரோப்ரைட்டர்:- M. பொன்னையா
ஆனந்தா வைத்தியசாலை
நிர் 174, A செட்டியார் தெரு, கொழும்பு



எகிப்தில் நைல் நதியில் ஓவன் நீர்வீழ்ச்சி அணைக்கட்டு வேலைகள் இப்பொழுது பூர்த்தியாகி இருக்கின்றன. "இதனுல் விக்டோரியா" ஏரியில் அதிகப்படியாகத தேககப்படும் தண்ணீர் எகிப்தின் விவசாயத்திற்கும் பேருதவியாக இருக்கும் அணைக்கட்டின் உயரம் 60 அடி மின்சார [illegible] கட்டப்பட்ட மேற்படி அணைகட்டைப் படத்திற்காணக [illegible] இஞ்சினியர்கள் மின்சார நிலையத்தைக் கட்டுகிறுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனக்குரல்

### இன்னும் அசட்டையீனமா?

அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த பனையடிப்பிட்டி என்னும் ஊரில் உள்ள பால கொடுக்கும் நிலையம் ஓர் வீட்டில் உள்ளது இதை அதே ஊரைச் சேர்ந்த அரசினர் பாடசாலைக்குள் அமைத்துக் தருமாறு பொது மக்கள் ஏகோபித்த விண்ணப்பத்துடன் மேற்படி பகுதியைச் சேர்ந்த 'இன்ஸ்பெக்டருக்கும்' அதன் தலைவருக்கும் எத்தனையோ முறை அறிவித்தும் அவர்கள் "செவிடன் காதில் ஊதிய சங்கு"போல் கேளாது இருக்கிறார்கள்

இனிமேலாகுதல் ஏதும் நடவடிக்கை எடுக்காவிட்டால் இப்பொழுது போகின்ற 10 பிள்ளைகளும் இனிப் போகமாட்டார்கள என்பதையும் அசட்டையீனமாய் இராது நடவடிக்கை எடுக்குமாறும் அரசினரை வேண்டுகிறோம்.

இப்படிக்கு,
"தராசு"

பனையடிப்பிட்டி,
அக்கரைப்பற்று

### வெலிசறையில் பிரார்த்தனை ஸ்தலம்

வெலிசறை மார்பு நோய் ஆஸ்பத்திரியில் இந்து நோயாளர் தங்கள் சமயத்தை அனுஷ்டிப்பதற்கும் ஓர் பிரார்த்தனை ஸ்தலம் ஏற்படுத்தி அதைக் கொண்டு நடத்துவதற்கும் உத வீபுரியும் நோக்கத்துடனும் 7-7-52 ல் இந்துக்கள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சங்கத்தாரின் பிரார்த்தனை ஸ்தலத்திற்கு வேண்டிய திருத்தங்கள் செய்வதற்கும் தளபாடங்கள் வாங்குவதற்கும் நிதி தேவைப்படுகிறது. எனவே அனுதாபங்கொண்ட அன்பர்கள் தங்களால் இயன்ற பண உதவி செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்
க. செல்வராசா
காரியதரிசி.

3-ம் வார்டு
வெலிசறை ஆஸ்பத்திரி.

### சத்தியாக்கிரகம் ஓங்குக!

வருஷந்தோறும ஆடிப்பூசை பண்டிகையை ஊவாப் பகுதியிலுள்ள தொழிலாளர்களாகிய நாங்கள் மிக குதூகலத்துடன் கொண்டாடுவது வழக்கம் ஆனால் இவ் வருடம இலங்கை-இந்தியர்களின் உரிமைப் போரான சத்தியாக்கிரக இயக்கம் கொழும்பில் நடைபெறுவதனால் அவ்வியக்கத்திற்கு உதவயளிப்பதற்காக இப்பண்டிகையை நிறுத்த ஊவா இலங்கை-இந்திய காங்கிரஸ் கமிட்டி செய்துள்ள முடிவை வரவேற்கின்றோம சத்தியாக்கிரகம் ஓங்குக!

இங்ஙனம்
சு. மோகன்.

பதுளை.

# சுதந்திரன்

SUTANTIRAN

194எ, தட்டாதெரு போன்: 3411

1952 ஜூலை மீ 20 உ

## நல்லையாவின் ராஜினமா

தபால் தகவல் மந்திரி திரு நல்லையாவின் ராஜினமா தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பெரும் அதிர்ச்சி தரும் செய்தியாகிவிட்டது.

அவர் ராஜினமாவுக்கு காரணம் தேக அசௌக்கியம் என்று உத்தியோகதோரணையில் கூறப்பட்டது ஆனல் இக்காரணத்தை யாரும் நம்பத் தயாரில்லை: தேக அசௌக்கியம் காரணம் என்றால் திடுதிப்பென்று ராஜினமாச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சில மாதகாலம் ஓய்விலிருந்து பின்பு குணப்படாவிட்டால் ராஜினமாச் செய்திருக்கலாம். எனவே ராஜினமாவின் உண்மைக் காரணம் என்ன என்பதை அறிவதில் மக்கள் அளவற்ற ஆவலுடையவர்களாய் இருப்பது இயற்கையே.

ஒரு மந்திரி அரை மந்திரிப் பதவிகளினல் தமிழ் பேசும் இனம் விமோசனம் அடையும் என்று நாம் ஒருபோதும் கருதியதில்லை. என்றாலும் தமிழ் பேசும் மந்திரியொருவர் ராஜினமாச் செய்யும் நிலைமைக்குள்ளானார் என்ற செய்தியைக் கேட்டு நாம் வருந்தாமல் இருக்க முடியாது.

நமது அரசியல் கொள்கைக்கு அடுக்காத பல விதக் குறைகள் திரு நல்லையாவிடம் இருந்திருக்கலாம் அதற்காக நாம் திரு. நல்லையாவின் நிறைவுகளை ஒருபோதும் தாழ்த்துவதற்கு விரும்பியதில்லை.

திரு. நல்லையா மந்திரியாகப் பதவியேற்றதும் நிர்வாக ஊழல்கள் மலிந்த பல இலாக்காக்களில் சீர்திருத்தத்தையும் அபிவிருத்தியையும் செய்யமுற்பட்டார் என்பது பகிரங்க இரகசியம். அவர் செய்ய விருந்த மாற்றங்களுக்கு நாமும் பரிபூரண பக்கபலமாகவிருக்க எண்ணியிருந்தோம் இதன காரணமாக அவருக்கு முட்டுக்கட்டையேற்பட்டு ராஜினமாச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அது ஒவ்வொரு தமிழ் மகனும் பெருமையடையக்கூடிய நிலைமையாகும்.

அல்லது கொள்கையளவில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு ஒரு வீரனாக வெளியேறினல் அப்போது தமிழ் மக்கள் இரண்டு மடங்கு பெருமையடைந்திருப்பார்கள

ஆனல் திரு நல்லையாவின் ராஜினமாவுக்கு காரணமாக வேறு பல வதந்திகள் அடிபடுகின்றன.

ஒரு தமிழ் மந்திரிக்கு ஏற்பட்டுவிட்ட கதியைப் பற்றி இதர பத்திரிகைகள் வாயடைத்து நிற்கின்றன. ஆனல் நம்மால் அப்படி நிற்க முடியாது. சம்பந்தப்பட்டவர் அரசியலில் நமக்கு மாறுபட்டவராய் இருக்கலாம் ஆனல் அவர் ஒரு தமிழர் என்ற பாசம் நம்மைவிட்டுப் போகாது. எனவே நமது ஆழ்ந்த வருத்தத்தை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திரு. நல்லையாவின் ராஜினமாவை இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது அது தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் பாடமாகவும் அமைகிறது.

1947 ல் நடைபெற்ற தேர்தலில் 20 தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இடம் பெற்றனர். இவர்களில் 16 பேர் எதிர்க் கட்சியில் நின்றனர் திருவாளர்களான சுந்தரலிங்கம், சிற்றம்பலம், நல்லையா, எதிர்மன்னசிங்கம் ஆகிய நால்வரே அரசாங்கத்தோடு நின்றனர்.

இந்த நால்வரில் பதவி வகிக்கத் தகுதிவாய்ந்த மூவருக்கு மந்திரிப் பதவிகள் அவ்வப்போது வழங்கப்பட்டன. "ஆறு கடக்குமட்டும் அண்ணன் தம்பி ஆறு கடந்த பின் நீயாரோ நான் யாரோ" என்ற ரீதியில் தங்கள் தேவை முடிந்ததும் இவர்கள் ஒவ்வொருவராகக் கைவிடப்பட்டனர். இந்த முறையில் சிங்கள வகுப்புவாதிகளால் கடைசியாகக் கைவிடப்பட்டிருப்பவர்தான் திரு. நல்லையா.

இத்தோடு நின்றிருந்தால் இவர்களுக்கு ஒரு மனச்சாந்தியாவது கிடைத்திருக்கும். ஆனல் இப்போது இவர்கள் நிலை என்ன?

இவர்களுக்கு நடந்ததுதான் திருவாளர்கள் பொன்னம்பலம், நடேசன், குமாரசாமி ஆதியோருக்கும் என்றோ ஒருநாள் நடக்கும் இதை தமிழ் மக்கள் அறிந்துகொள்ளுகின்ற காலம் வரும் அப்போதாவது தமிழ் இனம் கண்விழிக்கட்டும்.

## கண்டதும் கேட்டதும்

தியாகி

ரேடியோ ஸிலோன் இசைக் கலைஞரைத் தரம் பிரிப்பதற்கு ஒரு விசேஷ இசைப் பரிசோதனை நடத்தப்போகிறார்களாம். விசேஷ இசைப் பரிசோதனை என்று சொல்வதைவிட விசித்திர இசைப் பரிசோதனை என்று சொன்னால் பொருத்தமாய் இருக்கும் என்று நம்புகிறோம்.

வழக்கப்போல் இந்தப் பரிசோதனையை பேராசிரியர் ஸ்ரீனிவாசனே நடத்துவார் என்று பத்திரிகைகளில் காணப்பட்டது. இந்தத் தரம் பிரிக்கும் சோதனையை ஒருவர் நடத்துவது சரியல்ல, இரண்டுக்குமேற்பட்ட பரிசோதகர்களைக் கொண்ட ஒரு சபை நடத்தவேண்டும் என்ற அபிப்பிராயம் அவ்வப்போது வெளியிடப்பட்டது இன்னும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்து வருகிறது.

மேற்படி பரிசோதனையைபற்றிய விதிகளை எவருடைய அதிகார அத்தாட்சியுமின்றி மொட்டையாக வெளியிட்டிருக்கிறார்கள் ரேடியோ ஸிலோன் தமிழ் பகுதியினர் அதில்தான எத்தனை முரண்பாடுகள்!

"பாடகர் தராதரத்தை மதிப்பிடுவதற்கு அவரது சங்கீதத் திறமையே அளவுகோலாகக் கருதப்படும்" என்று முதலாவது விதி கூறுகிறது. ஆனல் இரண்டாவது விதியோ "சாரீரத்தில் ஒலிபரப்புக்கேற்ற குரலைக்கொண்டு தரம் மதிக்கப்படும்" என்கிறது.

முற்கால தற்கால (நல்லவேளையாக கற்காலம கேட்கப்படவில்லை) சாகித்ய கர்த்தாக்களின் பாடங்கள் தெரிந்திருத்தல் அவசியம். பின் வரும் சாகித்ய கர்த்தாக்களின் பாடங்களில் சிலவற்றையாயினும் பாடகர் அறிந்திருத்தல் வேண்டும் என்று கூறி சில சாகித்ய கர்த்தாக்களின் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள் அவர்களில் சிலர் தெலுங்கு கன்னட சமஸ்கிருத கர்த்தாக்களாக விருக்கின்றனா இது அவசியமா? ஆனல் இந்தப் பட்டியலில் பாரதிதாஸன், பெரியசாமித் தூரன், கோடீஸ்வர ஐயர், கவிக் குஞ்சர பாரதி, அனம் கிருஷ்ண ஐயர், மாரிமுத்தா பிள்ளை, தேசிகவிநாயகம் பிள்ளை போன்ற அருமைத் தமிழ் கர்த்தாக்களின் பெயர் சேர்க்கப்படவில்லை நம் நாட்டவர்க்கு தமிழ் பாடல்களே முக்கியம அன்றி புரியாத தெலுங்கும் கன்னடமும் சமஸ்கிருதமும் ஏன்?

இன்னொரு விதியில் பின் வரும் ராகங்களில் பொதுவான அறிவு விரும்பப்படும் என்று கூறி அடபகுதியில் [illegible] ராகங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன இந்த ராகங்களில் பொது அறிவு வேண்டுமாம். அது என்ன பொது அறிவு? பெயர்களைக் கேள்விப்பளவில் அல்லது புத்தகங்களில் பார்த்த பொது அறிவா அல்லது அந்த ராகங்களை யாரும் பாடக் கேட்டு அவைகளின் உருவங்களைத் தெரிந்திருப்பதா அல்லது அந்த ராகங்களை ஓரளவில் பாடும் திறமையுடையதாயிருப்பதா என்பது விளங்கவில்லை. இப்பகுதியில் மாயாமாளவ கௌள என்ற இராகமும் இருக்கிறது ஆரம்ப பயிற்சிப் பாடங்களே மாயா மாளவ கௌள இராகத்திலிருந்தும் இதைப்பற்றுப் பொதுவான அறிவு வேண்டப்படுகிறது! இசை உலகில் நல்ல பிரபலமான செஞ்சுருட்டி, வாசஸ்பதி, ஆபோகி முதலியனவும் பொது அறிவுப் பகுதியில் வைத்திருப்பதைப் பார்த்தால் இந்தப் பாடத் திட்டம் அமைத்தவரின் இசை அறிவு சந்தேகப்படக்கூடியதாகிறது.

இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால் "தற்கால சங்கீதப்பற்றிய பொது அறிவும் எதிர்பார்க்கப்படுகிறது" தற்கால சங்கீதம் என்பது என்ன? ஸ்பானிய, சீன, ஆங்கில, ஜெர்மன இசைகலந்த சாம்பார் சங்கீதமா அல்லது கற்கால சங்கீதமல்லாத மற்றதெல்லாம் தற்கால சங்கீதம் எனப்படுமா?

இலங்கை வானொலித் தமிழ் கலை மன்றத்தினர் ஒரு விசேஷப் பொதுக் கூட்டத்தில் தர்ம நியாயமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவிருக்கிறார்கள்.

"இலங்கை வானொலித் தமிழ்க் கலை மன்றத்தின் பிரதிநிதிகளை ரேடியோ ஸிலோன் தமிழ் பகுதி ஆலோசனைச் சபைகளுக்கு நியமிக்க வேண்டும்" என்பதுதான் அந்தத் தீர்மானம்

அப்படி நியமிக்க ஒழுங்கு செய்வதாக மாஜி மந்திரி திரு நல்லையா வாக்களித்திருந்தார் என்று தெரிகிறது. திரு நடேசன் அவ் வாக்குறுதியை அவசியம் நிறைவேற்றி வைப்பார் என்று நம்புகிறோம்.

### செய்திகளை பரப்ப புறாக்கள்!

குளோஸ் கவுண்டி
(அயர்)—

தற்போது டப்ளின் பத்திரிகைகளில் வேலைநிறுத்தம் நடைபெறுவதால் புறாக்கள் செய்தி கொண்டு வரும் பழைய கால முறை மீண்டும் நடைமுறைக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனஒதுக்கல் சட்டத்தை ஒழிக்க உரிமைப் போராட்டம்

## தென்னாபிரிக்காவிலும் சத்தியாக்கிரக சங்கநாதம்

தென்னாபிரிக்காவில் நிற வெறியன் மலானின் பாஸிஸச் சட்டங்களைத் தவிடுபொடியாக்க கடந்த 26ந் தேதி சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது அந்நாட்டைப் பீடித்துள்ள காட்டுமிராண்டித் தனமான நிறவெறிப் பேயாட்டத்தை எதிர்த்து ஒரு காலத்தில் காந்திஜீயே முன்னின்று சத்தியப் போரை நடத்தி வைத்தார். அன்று காந்திமகான் கொட்டிய போர் முரசுதான் இன்று அங்கு எதிரொலிக்கிறது.

தென்னாபிரிக்காவில் நிறவெறித்தாண்டவம் இன்று உச்ச நிலை அடைந்துவிட்டது. கறுப்பு நிறத்தவர்களை (இந்தியர்களையும், ஆபிரிக்க சுதேசிகளையும்) தீண்டத் தகாதவர்களென ஒதுக்கிவைத்து இழிவு படுத்துகிற கறுப்புச் சட்டங்களைப் பிடிசாம்பலாக்க தென்னாபிரிக்க — இந்தியர்களும், ஆபிரிக்கச் சுதேசிகளும் கைகோர்த்து கொண்டு கொதித்தெழுந்து விட்டார்கள். ஆபிரிக்க தேசிய காங்கிரஸும் தென்னாபிரிக்க இந்தியர் காங்கிரஸும் ஒரு ஐக்கிய முன்னணி வகுத்து உரிமைப் போராட்டத்தில் குதித்து விட்டன. ஆபிரிக்க தேசீய காங்கிரஸ் 10 000 தொண்டர்களைக் கொண்ட ஒரு சத்தியாக்கிரகப் படையைத் திரட்டியிருக்கிறது.

### முதல் தாக்குதல்

டாக்டர் வை எம். டாடு, ஜே. பி. மார்க்ஸ் முதலிய 4 தலைவர்களுக்கு தத்தம் ஸ்தாபனங்களிலிருந்து ராஜிநாமா செய்ய வேண்டுமென்று மலானின் அரசாங்கம் உத்தரவிட்டது. இந்த மிருகத்தனமான சட்டத்தை அவர்கள் மீறியதுடன் பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு சட்டத்திற்குச் சவால் விடுத்தனர் அவர்களைப் பிடித்துச் சிறைக்குள் தள்ளியது மலான் அரசாங்கம் நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது மக்களின் உரிமை உணர்ச்சி கரைபுரண்டோடியது போராட்டம் ஆரம்பமாகிவிட்டது.

### சட்டங்கள் தவிடுபொடி

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்திற்குள் கறுப்பர்கள் நுழையக் கூடாது என்ற சட்டத்தை மீறியதற்காக ட்ரான்ஸ்வால் இந்தியர் காங்கிரஸ் தலைவி நானாசீதா 52 தொண்டர்களுடன் முதல் நாளன்று கைதியாகி விட்டார் ஆபிரிக்க சுதேசிகள் இரவு 11 மணிக்கு மேல் தெருவில் நடமாடக் கூடாது என்ற சட்டத்தை மீறியதற்காக ஜொகன்னர்ஸ்பர்க் தொண்டர் கோஷ்டியொன்று கைது செய்யப்பட்டது

தென்னாபிரிக்காவில் ரயில்வே ஸ்டேஷன்களில், தபால் ஆபீஸ்களில், ரயில், ட்ராம், பஸ் வண்டிகளில் வெள்ளையர்களுக்கென தனி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன அந்த வசதிகளை கறுப்பு நிறத்தவர்கள் உபயோகிப்பது சட்டவிரோதம் இந்த ஒதுக்கல் சட்டத்தை மீறியதற்காக நூற்றுக் கணக்கான தொண்டர்கள் முதல் நாளன்றே கைது செய்யப்பட்டார்கள்.

சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெறுகிறது.

## சாவகச்சேரி........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் சட்டப்படி குறைந்தபட்சம் இரண்டு மந்திரிகளாவது செனட் சபையிலிருந்து நியமனம் செய்யப்பட வேண்டும் இதுசம்பந்தமாக சட்டம் கூறுவதாவது:—

"செனட் சபை அங்கத்தினர்களில் இருவருக்குக் குறையாமல் மந்திரி பதவி கொடுக்கவேண்டும் அவர்களில் ஒருவர் சட்டமந்திரியாக இருக்கவேண்டும்."

இப்பொழுது செனட் சபை அங்கத்தினர் ஒருவர் தான் மந்திரியாக இருக்கிறார். அரசியல் சட்டத்தின் இப்பகுதி தற்போதைய நிலைமையில் அமுல் நடத்தப்படுமானால், மேற்படி தற்காலிக மந்திரி மீண்டும் தனது பழைய ஸ்தானத்திற்குத் திரும்ப வேண்டி வரும்.

## ஸ்ரீ திருக்கேதீஸ்வர சம்புரோக்ஷண கும்பாபிஷேகம்

இலங்கையின் புராதன புண்ணிய தலமாகிய திருக்கேதீஸ்வரத்தின் கண்ணே கோவில்கொண்டருளிய கேதீஸ்வரனுக்கும் கௌரி அம்பாளுக்கும் பிள்ளையார் முதலாம் பரிவார மூர்த்திகட்கும் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் விதிப்படி சிறப்பாக பன்னூற்றுக்கணக்கான அன்பர்கள் முன்னிலையில் நடந்த 9-7-52ல் இனிது நிறைவேறியது.


இவ் ஆலய ஜீர்ண உத்தாரணம் திருப்பணிச் சபை உப அக்கிராசனர் திரு கே. வி எஸ் சுந்தரம் அவர்களால் பெரும் பொருள் செலவு செய்யப்பெற்று, யாழ்ப்பாணம் சித மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களின் மேற்பார்வையில் செய்யப்பட்டது.

அன்று சாயந்தரம் வழக்கப்போல் சங்காபிஷேகமும் அன்றிரவு மணவாளக் கோல விசேஷ உற்சவமும் நடைபெற்றது. அங்கு வந்த பன்னூற்றுக்கணக்கான அன்பர்கட்கு அன்ன தானமும், தங்குவதற்கு ஆகிய சௌகரியங்களும் செய்யப்பெற்றன.


ரெஜிஸ்ரேட் நம்பர் 13207.

இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கமலா பப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை பாவித்துப் பாருங்கள்!




உணவே மனிதனுக்கு ஊக்கம் உண்டாக்குவது!!

அந்த உணவை ருசிப் படுத்துவது

கமலா பப்படம்

முதல்ரக உழுந்தால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது மணம், குணம், ருசியுள்ளது.

மொத்த வியாபாரிகளுக்கு சலுகை உண்டு

Proprietor: பி. எம். ஹமீது,

197, கெய்ஸர் வீதி, கொழும்பு


# தொழிலாளர் காங்கிரஸ் ஒரு தேசீய ஸ்தாபனம்

ஜினிவாவில் நடைபெற்ற சர்வதேசிய தொழிலாளர் ஸ்தாபனத்தின் மகாநாட்டுக்கு இலங்கைத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக திரு குணசிங்காவின் ஆதிக்கத்திலுள்ள இலங்கைத் தொழிற் சங்கக் காங்கிரஸின் பிரதிநிதியை அரசாங்கம் இவ் வருடம் தேர்ந்தெடுத்தது இதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சேபித்து சர்வதேசீய தொழிலாளர் ஸ்தாபனத்திற்குப் புகார் செய்துகொண்டது.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு எஸ். எம். சுப்பையா (படம்)

"ஏராளமான இலங்கைத் தொழிலாளர்களை அங்கத்தினராகக்கொண்ட "இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின்" தேசீயத் தன்மையை அங்கீகரிக்க இலங்கை அரசாங்கம் மறுக்கிறது. அந்தத் தொழிலாளர்களில் பலர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்களில் பெரும்பாலோர் பல வருடங்களாகத் தொடர்ந்து இலங்கையில் வசித்துவருகின்றனர்.

அவர்கள் அங்கம் வகிக்கும் ஸ்தாபனத்தின் பிரதிநிதித்துவத் தன்மையை அங்கீகரிக்க மறுப்பதானது, அந்த நாட்டின் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் தாங்குவதில் பங்கெடுப்பதற்கு அவர்களுக்குள்ள உரிமையைப் பறிப்பதாகும். இந்தியர்கள் அல்லாத தொழிலாளர்களும் தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகிப்பதால், அந்த ஸ்தாபனம் தேசீயத்தன்மையற்றது என்று கூற முடியாது"

இவ்வாறு சர்வதேசீய தொழிற் சங்க [illegible] பிரதிநிதிகள் [illegible] கமிட்டியின் அறிக்கை கூறுகிறது.

1951-ம் வருட இலங்கைத் தொழிலாளர் கமிஷனரின் அறிக்கையின்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் 134 271 தொழிலாளர்களும், இலங்கைத் தொழிற் சங்கக் காங்கிரஸில் 24,151 தொழிலாளர்களும், இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் 17,306 தொழிலாளர்களும், இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தில் 15,204 தொழிலாளர்களும் அங்கம் வகிக்கிறார்களென்பதைச் சுட்டிக் காட்டும் பிரஸ்தாப அறிக்கை மேலும் கூறுவதாவது:—


"தேசீய ஸ்தாபனமல்ல என்ற கூற்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மறுக்கிறது அதில் 25,000 சிங்களத் தொழிலாளர்களும் அங்கம் வகிக்கிறார்களென்றும், அரசாங்கத்தின் ஒரு தலைப்பக்ஷமான சட்டத்தால் இந்தியர்கள் இலங்கைப் பிரஜைகளாக முடியவில்லையென்றும் காங்கிரஸ் கூறுகிறது. இலங்கை சுதந்திரமடையமுன்பு இலங்கை வாழ் இந்தியர்களுக்குச் சம அந்தஸ்து [illegible] இலங்கை அரசாங்கப் பிரதிநிதியே ஒப்புக்கொள்கிறார்."


இரும்பு பணப் பெட்டிகள்

லண்டன் நகர ஜோன்டான லிமிட்டெட்டாரால் உற்பத்தி செய்யப்பட்டவை

1795-ம் ஆண்டில் ஸ்தாபகம் - மிகப் பழைய ஸ்தாபனம் - உலகத்திலேயே மிகக் கைதேர்ந்த க்ஷேமயந்திர சிற்பிகள்

நெருப்பைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது அதனுள் உள்ள பொருள்களை இதுவரை நெருப்பால் நாசப்படவில்லை.



கள்வர்களைத் தடுக்கும் ஒரு ஜோன்டான் இரும்புப் பெட்டியாவது இதுவரையில் கள்வர்களால் திறக்கப்படவில்லை.

டொட்வெல் & கம்பெனி லிமிட்டெட்

ஆபீஸ் பொருட்கள் விற்பனைப் பகுதி.

18/20, குவீன்ஸ் வீதி, கோட்டை. கொழும்பு

போன்: 2301.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ★ வாடா மலர்

நீண்ட நாட்களுக்குப் பிறகு—முழுசாக பத்து வருடங்களின் பின்—அவளை நான் கண்டபோது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. கடந்து போன—மீண்டும் வாழ்க்கையில் ஒருக்காலும் வர முடியாத—அந்தப் பத்து வருடங்களில்தான் உலகத்தில் எத்தனை மாற்றங்கள்.

உலகமே கண்டும் கேட்டுமிருக்க முடியாத கோரப் போரைத் தொடக்கி கோடிக்கணக்கான வீரர்களையும் பொதுமக்களையும் களப்பலி கொடுத்த ஹிட்லரின் டலப்பொருந்திய சைன்யங்கள் இருந்த இடமே தெரியாது மறைந்துபோயின. ஆசிய நாடுகளை கிடு கிடுக்கச் செய்த சுண்டைக்காய் ஜப்பானியர்கள் தோல்வி கண்டு அணுகுண்டுக்குப் பலியாகி அடங்கினர். இப்படி எண்ணற்ற மாற்றங்கள் உலகத்தின் மூலைமுடுக்குகளெங்கும் உண்டாயின. மாறின. மறுபடியும் உண்டாயின.

ஃ ஃ

என்னைக் கண்டதும் திலகம் 'திருதிரு' வென்று விழித்தாள். கண்ணை வெட்டி வெட்டி மூடினாள். ஆச்சரியத்தால் அவள் அலரி மொட்டுக்கள்போன்ற கண்கள் விரிந்தன. அந்த மாற்றத்தைப் பின்தொடர்ந்து மாபிளைபோன்ற அவள் கன்னத்தில் புன்னகையின் மின்வெட்டுக்கள் பளிச்சிட்டன. மெல்ல......மெல்ல நெழிந்துகொண்டிருந்த சிவந்த உதடுகளின் உள்ளேயிருந்து நீல வானத்தில் மின்னும் நட்சேத்திரங்கள் போன்று சின்னஞ் சிறிய பற்கள் மின்னின. பல திசையும் வளைந்து நெளிந்துகொண்டு ஓடும் வற்றாத ஜீவநதிகள்போன்று அவளுடைய சுருண்ட கேசரங்கள் தோள்களில் தொங்கிக்கொண்டு அவள் காதுகளில் ஏதோ இரகசியம் பேசிக்கொண்டிருந்தன. அவள் இரண்டு காதுகளிலும் தொங்கிக்கொண்டிருந்த டோலக்குகள் ஒவ்வொரு அசைவுக்கும் டால் அடித்தன.

ஹாலிவுட் நட்சத்திரங்களைப்போன்று கூந்தலை வெட்டி நிமிர்ந்த மூக்கை நேராக வைத்து நேர் வகிடு எடுத்து கூந்தலை கோதிவிட்டிருந்தாள். அவளாகவே கேட்டாள். "ஏன் அப்படி என்னைப் பார்க்கிறீர்கள்?" என்று.

என்னை தெரியுமா? என்ற வார்த்தைகள் எப்படியோ என் வாயிலிருந்து பிறந்தன.

'ஓகோ தெரியுமே' என்றாள் ஓரக் கண்களால் என்னைப் பார்த்த வண்ணம் நெழிந்துகொண்டு. அவளுடைய சௌந்தர்ய தோற்றமும் அங்கங்களின் அசைப்பும்—அதரத்தடாகத்தில் குதித்து விளையாடிய புன்முறுவலும் என்னை என்னவோ செய்தன.

"என் ஞாபகம் இருக்கிறதா இன்னும்?

"ஞாபகமா? இருக்கிறதே' என்றாள் என்தோள்களோடு உராய்ந்துகொண்டு

அடுத்து என்ன கேட்பது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருக்கும்போது 'என்ன மிஸ்டர் ராஜன் பெண்கள் ஆண்களைப் போன்ற இரும்பு நெஞ்சம் படைத்தவர்களா?" என்று அவளே கேட்டாள். நான் நிலத்தைப் பார்த்தவாறு நடந்து கொண்டிருந்தேன்

"பெண்கள் இரும்பு நெஞ்சம்படைத்தவர்களல்ல அரக்க உள்ளம் கொண்டவர்கள். தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்காக கொலை கூடச் செய்யத் தயங்காதவர்கள்" என்று சொல்ல வேண்டுமென்று என் மனம் துடித்துக்கொண்டிருந்தது. ஆனால் உதடுகளோ சத்தியாக்கிரகம் செய்ததோ டல்லாமல் மௌன விரதமும் பூண்டுகொண்டிருந்தன

"உலகம் எவ்வளவோ மாறிவிட்டது என்ன மிஸ்

**எஸ். இராஜன்**

டர் ராஜன்? குறும்புகலந்த வண்ணம அவள் கேட்டாள்.

'உம்' என்றுதான் பதிலளிக்க என்னால் முடிந்தது.

'இந்தப் பத்து வருடங்களில் நாம் எவ்வளவுதான் மாறிவிட்டோம். அந்த அரச மரம் நாம் குழந்தைகளாக இருந்த சமயத்தில் சின்னஞ் சிறிய கன்றாக இருந்தது இப்போது அம்மாடி எத்தனை பெரிய மரமாயிற்று.

அவள் என் கைகளைப் பிடித்துக்கொண்டு நடந்தாள். பகல் பன்னிரண்டு மணித்தியாலங்கள் வெறிச் சென்று ஒளி கொடுத்துக் கொண்டிருந்த சூரியன் களைப்படைந்து கண்தூங்க மேற்கு மஞ்சத்தில் சரிந்த சமயம். அந்தி மயங்கி இருளின் கோடுகள் உலகை கருமையாக்கிக்கொண்டிருந்தன.

'ஏன் ராஜன் உங்கள் கை நடுங்குகிறது!' அவள் கேள்வியில் நடுக்கம் கலந்த குழைவு இருந்தது.

அரச மரத்தின் கீழிருந்த பெஞ்சில் அவள் உட்கார்ந்தாள் நான் அவள் பக்கத்தில் உட்கார வேண்டுமென்று அவள் விரும்பினாள்.

ஏன் பயப்படுகிறீர்கள் நான் விவாகமானவள் என்ற பீதியா? என்று கேட்டவண்ணம் எழுந்து நின்றாள். நான் ஓரடி பின் வாங்கினேன் என உதிரட்டம் அப்படியே நின்று நான் கல்லாகிப்போன நிலை ஏற்பட்டது.

ராஜன்...........

நான் நிமிர்ந்து பார்த்தேன்.

எதிரிலோடிக்கொண்டிருந்த ஆற்றில் படிந்து அவள் முகத்தில் விழுந்து கொண்டிருந்த சூரியனின் கடைசிக் கதிர்கள் அவள் கண்களிலிருந்து வடிந்துகொண்டிருந்த கண்ணீர் முத்துக்களை என் கண்களுக்குத் தெரியச் செய்தன. கைக்குட்டையை எடுத்து என் கண்களைத் துடைத்துக்கொண்டேன்.

ஒருகாலத்தில் அந்த அரச மரத்தின்கீழ் நாங்கள் ஆயிரக்கணக்கான சத்தியங்கள் செய்தோம். வாழ்ந்தால் இருவரும் வாழ்வோம். மாண்டால் இருவரும் இந்த ஆற்றில் குதித்து மாழ்வோம் என்றெல்லாம் எங்கள் வாக்குத்தத்தங்கள் இருந்தன வாயளவில் மட்டுமல்ல. எழுத்தளவிலும்.

எழுத்தளவில் இருக்கும் எத்தனையோ உடன்படிக்கைகளை உதறித்தள்ளி ஒரு நொடிக்குள் நேர் மாறாக பெரிய பெரிய வல்லரசுகள்கூட நடைமுறைக் காரியங்கள் செய்கின்ற இச் சமயத்தில் நீங்கள் எம்மாத்திரம் என்று பலர் எண்ணக்கூடும். ஆனால் நாங்கள் வல்லரசுகள் அல்லவே. வல்லரசுகள் பல இருட்பதை எந்த வல்லரசும் விரும்பாது. தான மட்டும் இருக்க வேண்டுமென்பதற்காக இதர வல்லரசுகளைத் தொலைத்துக்கட்டவே ஒவ்வொரு வல்லரசுகளும் துடிக்கின்றன. அதன் பேரில்தான் எழுதிய உடன்படிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராக அவை நடக்க முற்படுகின்றன.

ஆனால் நாங்கள் அப்படி நினைக்கவில்லையே. நாங்கள் இருவரும் வாழ வேண்டுமென்றல்லவா விரும்பினோம். அதன் முடிவு.

இரண்டாவது மகாயுத்தத்தில் ஜப்பானிய குண்டுகள் திரிகோணமலையைப் பதம்பார்த்த சமயத்தில் அவள் குடும்பம் எங்களூருக்கு ஓடி வந்தது. ஒரு விதத்தில் நல்ல நிலையிலுள்ள குடும்பந்தான். குண்டுகள்தான் ஆண்டவன்களாயிற்றே. ஏனென்றால் ஆண்டவன் சந்நிதானத்தில் ஏழை, பணக்காரன் இருப்பவன் இல்லாதவன் எல்லாம சமமாயிற்றே. அதுபோல் குண்டுகளும் இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் தயவு தாட்சணயம காட்டாது தன் கடமையை அதாவது வெடிக்கும் கடமையை செவ்வனவே நீதியோடு செய்துகொள்ளும் சக்தி வாய்ந்தவை.

பாவாடை கட்டிப் பள்ளிக்குப்போகும் பத்தாவது வயதில் அவள் எங்கள் பக்கத்தில் வீட்டில் குடியிருக்க வந்தாள். அதன் பிறகு நாங்கள் பார்த்தோம் சிரித்தோம். கதைத்தோம். கடிதங்கள் எழுதினோம். காதலர்கள் ஆனோம். ஜப்பான்காரன் தோற்கடிக்கப்பட்டதும் வந்ததுபோல். திரும்பி போயும்விட்டாள். அதன பிறகு நான் உத்தியோகத்தில் சேர்ந்து பணக்கார ஆசாமி [illegible] ஒரே மகளின் மாப்பிள்ளையுமானேன் இன்று மூன்று குழந்தைகள் என்னைச் சுற்றிச் சுற்றி அப்பா அப்பா என்று கத்திக் கொண்டு திரிகின்றன.

இந்த நிலையில் இளமையுள்ளத்தைக் கவர்ந்த என் காதலியின் முன்—அவள் கண்ணீர் முத்துக்களின் முன்...நான்...

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை

ஒருவாறு சமாளித்துக் கொண்டு பெஞ்சில் உட்கார்ந்தேன். புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டு அவளும் உட்கார்ந்தாள்.

அவள் தன் கதையைச் சொன்னாள். கண்ணீரினால் எழுதப்பட வேண்டிய சோகக் கதை அது எனக்கு எழுதிய கடிதங்களை நான் உதாசீனம் செய்ததாக குறைகூறினாள் அவள் எழுதிய கடிதங்களை அவள் தகப்பனுக்கே அனுப்பி வைத்து தன்னைச் சூட்டுக்கோல் கொண்டு தாக்கச் செய்த கொடுமையைச் சொல்லி அழுதாள். கடைசியாக தன்னை வந்து அழைத்துக்கொண்டு போகும்படி எழுதிய கடிதம் அவள் தகப்பனுருக்கு கிடைத்து வீட்டில கிடைத்த அடியும் உதையும் தாங்கமாட்டாது தற்கொலை செய்யத்தான் சென்ற நெஞ்சு திடுக்கிடும் சம்பவத்தைச் சொன்னாள். பின்பு தன்னை வலுக்கட்டாயமாக ரூபா இருபதினாயிரத்துக்கு அதிகமாகக் கொடுத்து யாரோ எங்கள் ஊரைச் சேர்ந்த ஒருவனுக்கு கல்யாணம் செய்து வைத்த கதையையும் சொல்லிவிட்டு அழுதாள். என் கண்கள் கலங்கின

எங்கள் இருவருக்கும் இடையிலிருந்த இடைவெளியை அழித்துவிட்டு அவளை இறுக அணைத்தேன். இந்த உலகம் என் கண்களிலிருந்து மறைந்தது.

இரண்டு குழந்தைகளுக்கு தாயாக இருக்கும் அவளை வீட்டைவிட்டு விரட்டியிருக்கிறான் அவள் கணவன். என்னுடைய புகைப் படங்களையும்—அவளும் நானும் சேர்ந்து எடுத்திருந்த புகைப் படங்களையும்—என் கடிதங்களையும் கண்டு அவளை விபசாரியாக்கி விரட்டி அடித்திருக்கிறான் அவள் கணவன் சுந்தரம். இன்னுமொருவனுக்கு வாழ்க்கைப்பட்ட பின்பும் என்னை மறவாமல் என் நினைவாகவே இருக்கும் அவளை என் மனைவி சொர்ணத்துடன் ஒரு தடவை ஒப்பிட்டுப் பார்த்தேன். மாதம் பத்து கடிதங்கள் நான் போட்டாலும் ஒரு பதிலும் எழுதாமல் இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை நாலு வரி எழுதும் என் பணக்கார மனைவி சொர்ணத்தை ஒரு தடவை நினைத்துப் பார்த்தேன்.

ஆகாயத்தின் மேற்குப் பக்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் பிறைச் சந்திரனின் வெள்ளிக் கதிர்கள் எங்கள் முதுகில் விழுந்து கொண்டிருந்தன. வளைந்து தொங்கும் அவள் மெல்லிய [illegible] சுருள்களில் பட்டுத் தெறிக்கும் சந்திர ஒளியில்

[15-ம் பக்கம் பார்க்க]



### பாம்புகள்

ஆசிரியர்: பேராசிரியர் மா ஏகாம்பரநாதன். கிடைக்குமிடம்: மா சுவாமிநாதன், 4, பெஸன்ட் ரோட், கோபாலபுரம், சென்னை-6 விலை ரூ 1-00

"பாம்பென்றால் படையும் நடுங்கும்" என்பது பழமொழி. சிலர் 'பாம்பு' என்ற வார்த்தையை உச்சரிப்பதற்குக்கூட அஞ்சுவார்கள் அத்தகைய பாம்புகளைப்பற்றிய ஆராய்ச்சி நூல் தான் அது.

பாம்பின் உடலமைப்பு, அதன் வாழ்க்கை, விஷப் பாம்புகள், விஷமற்ற பாம்புகள், பாம்பு விஷத்திற்கு சிகிச்சை முறைகள் முதலிய விஷயங்கள் விரிவாகவும் தெளிவாகவும் இந் நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

கடற்பாம்பு, நாகப் பாம்பு, கட்டுவிரியன், கண்ணாடிவிரியன், சுருட்டை விரியன் முதலியவை விஷப் பாம்பு இனத்தைச் சேர்ந்தவைகளாகும். குருடிப் பாம்பு, கூழைப் பாம்பு, சாரைப் பாம்பு, ஓலைப் பாம்பு, பவழப் பாம்பு, தண்ணீர்ப் பாம்பு முதலியவை விஷமற்ற பாம்பு இனத்தைச் சேர்ந்தவைகளாகும்.

பாம்பு முதலிய விஷ சந்துக்களைப்பற்றி சித்தாரூடம் என்னும் நூலில் கூறியுள்ள விஷயங்களும் இதில் இடம்பெற்றிருக்கின்றன. தெள்ளிய நடை பாம்புகளின் படங்கள் கவர்ச்சியாக இருக்கின்றன. இது ஒரு விஞ்ஞானரீதியான உயிர் நூலாதலின், மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக வைக்கலாம்.

### கூட்டுறவு அல்லது ஐக்கிய உறவு

ஆசிரியர்: அ. அருளம்பலம். கிடைக்குமிடம்: திருமகள் அழுத்தகம், சுன்னாகம், யாழ்ப்பாணம். பக்கங்கள் 224, விலை ரூ. 3-00

கூட்டுறவு இயக்கம் இலங்கையில் ஓரளவு வளர்ச்சிபெற்றிருக்கிறது ஆனால் தமிழ் மொழியில் இவ்வியக்கத்தைப்பற்றி ஒருசில புத்தகங்கள் மட்டுமே வெளிவந்திருக்கின்றன. அந்தக் குறையை இந்நூல் அகற்றிவிடுகிறது. இந்நூலாசிரியர் கூட்டுறவு இயக்கத்தில் நிறைந்த அனுபவமுடையவர். அயல்நாடுகளிலுள்ள கூட்டுறவு இயக்கங்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்தவர்.

கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்பத்தைத் தெளிவாக விளக்கும் ஆசிரியர் கூட்டுறவு நாணய சங்கங்கள், கூட்டுறவு விளைபொருட் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவுக் கல்வி வெளிநாட்டு கூட்டுறவு இயக்கங்கள் முதலியவற்றை புள்ளி விவரங்களுடன் விரிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். சில போட்டோ படங்களும் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. பாடசாலைகளுக்கு ஏற்ற நூலென்று சிபார்சு செய்கிறோம்.

—புகா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதிரத்தை உறிஞ்சும் மாஜிமனைவிகள்

அமெரிக்காவிலே உயர்ந்த படியில் உட்கார்ந்திருக்கின்ற மங்கையரைப் பிடிக்கும் ஆடவர்களின் பணப் பைக்கு மட்டுமின்றி பிதுரார்ஜித சொத்துகளுக்கும் சில சமயங்களில் சனியன் பிடித்து விடும். கடந்த வருடத்தில் மட்டும் அமெரிக்க ஆரணங்குகள் விவாக ரத்து செய்துகொண்ட கணவர்களிடமிருந்து ரூபாய் 30 கோடி மதிப்புள்ள ஆண் இரத்தத்தை உறிஞ்சியிருக்கின்றனர் இது இந்திய சர்க்காரின் வருடாந்தர வருமானத்தில் 100 ல் 73 ஆகும்.

ஹாலிவூட் நட்சத்திரம் கிளார்க் கேபளின் ஆசை நாயகியான சில்வியா அஸ்லி என்ற சீமாட்டி தன் உடலைக் காப்பதற்காக ரூபாய் 50 லட்சம் ஜீவனாம்சம் கேட்டாள் நீதி மன்றம் ரூபாய் 10 லட்சம்தான் அனுமதித்தது. வாரம் ரூ. 40,000 சம்பளம் வாங்கும் கிளார்க் கேபளுக்கு ஒரு பிரிட்டிஷ் அழகிக்கு ரூபாய் 10 லட்சம் கொடுப்பது என்ன பிரமாதம்?

இளவரசர் அலிகானின் மனைவியாக கடமையாற்றிய சினிமா ராணி ரீட்டா ஹாவாத் தனது உடலைப் புதுப்பிப்பதற்காக அவரிடம் ஒன்றரைக் கோடி ரூபாய் ஜீவனாம்சம் கோருகிறாள். அவர் செய்த ஒரே குற்றம் யாஸ்மின் என்ற ஒரு குழந்தைச் செல்வத்தை அவளுக்கு அளித்ததுதான் அவள் தொடர்ந்துள்ள விவாக ரத்து வழக்கு இன்னும் முடிவடையவில்லை. இப்பொழுது ஹாலிவூட்டில் ஒரு புதிய படத்தில் அவள் நடித்துக்கொண்டிருப்பதால், படம் பூர்த்தியாகும்வரை வழக்கு ஒத்திப்போடப்பட்டது.

40 வருட மகிழ்ச்சி நிறைந்த மண வாழ்க்கைக்குப் பிறகு விவாக ரத்து பெற்றுகொண்ட தனது மனைவிக்கு ரூபாய் 1,32,00,000 ஜீவனாம்சம் கொடுத்துவிட்டு தலை தப்பிப் பெற்று கொண்டார் ஒரு பணக்கார சினிமா நட்சத்திரம்.

ஷேவியர் குகாட் என்பவர் ரூபாய் 7,50,000 கொடுத்து தனது வாழ்க்கைத் துணைவியாரிடமிருந்து தலைதப்பியது, தம்பிரான் புண்ணியமாகிவிட்டது. இன்னொரு அமெரிக்க மாது தன் உயிரை உடலோடு பிணைத்து கொள்வதற்காக வருடம் ரூபாய் 1,20,000 ஜீவனாம்சம் கோரினாள்.

தங்களின் மாஜி மனைவிகளுக்குத் ஜீவனாம்சம் கொடுக்க வகையற்ற புருஷர்களைப்பிடித்து நியூயோர்க் சிறையில் அடைத்து விடுவார்கள். ஜீவனாம்சம் கொடுக்க விரும்பாத சில கொடாக் கண்டர்களும் "இச்சிறையில் சரணடைவது வழக்கம். இச்சிறையை "ஜீவனாம்சகிளப்" என்று அன்புடன் அழைப்பார்கள் அமெரிக்க மாதுசிரோமணிகள்.

பிரிட்டிஷ் பெண்களையும் பார்க்க அமெரிக்கப் பெண்கள் அதிர்ஷ்ட சாலிகள் தான். பிரிட்டிஷ் மாஜிக் கணவர்கள் வருடம் ரூ 9 கோடி தான் ஜீவனாம்சம் கொடுக்கின்றனர் பிரிட்டனில் ஆடவர்கள் பஞ்சம் கடுமையாக இருக்கிறது. ஒருவன் ஒருத்தியிடம் சிக்கிவிட்டால், அவன் சுலபமாகத் தப்பிப்போக முடியாது. பிச்சைக்காசு மாதிரி அவனிடம் லட்சக்கணக்கில் ஜீவனாம்சம் பெறுவதிலும், "காசு காய்க்கும் மரத்தை" தன் கைக்குள் வைத்திருப்பதில் அதிகபயனுண்டென்பதை பிரிட்டிஷ மனைவி உணர்ந்திருக்கிறாள்.




## பெத்த மனுஷ்யாலு

நடிகர்—படத் தயாரிப்பாளரான கே. நாகேஸ்வர ராவுக்குச் சொந்தமான "அன்னபூர்ணா பிக்சர்ஸ்" தயாரிக்கப் போகும் முதல் படத்திற்கு "பெத்தமனுஷ்யாலு" (பெரிய மனிதர்) என மகுடமிடப்பட்டிருக்கிறது. இந்த படத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை பிக்சர்ஸார் துரிதமாக செய்து வருகிறார்கள்.

கதையும், வசனமும் தயாராகிவிட்டது. கூடிய சீக்கிரம் வாஹினி ஸ்டூடியோவில் படப்பிடிப்பு துவங்கிவிடும். காமிராவை கையாளும் பொறுப்பு கே. வி. ரெட்டியிடம் ஒப்படைக்கப்படும்.

## சினிமா செய்திகள்

நமகர் ஜி. எம் பஷீர் "ஜி. எம். பி. புரொடக்ஷன்ஸ்" என்று ஒரு புது படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்.

● வங்காளத்தில் பிரபல பெண் கவியென புகழ் பெற்ற "சந்திரவதி" யின் வாழ்க்கை சரிதம் படமாக தயாரிக்கப்படுகிறது.

● "ராம் ராம பதனி" என்ற மராத்திய படம் இந்தியிலும், தமிழிலும் தயாரிக்கப்படும்.

● பிரபல இந்தி நடிகர் கன்யாலால் "சுபேதார்" என்ற இந்தி சமூகப்படத்தை தயாரிப்பதோடு அதன் டைரக்ஷன பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

● பாவி சகோதரிகள் "அஜீங்கார்" என்ற பெயரில் ஒரு இந்திப் படம் தயாரிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

● யுவா பிக்சர்ஸாரின் "சியாமளா" படத்தில் மேலும் சில பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளனவாம். இவற்றை எம் கே தியாகராஜ பாகவதர் பாடியுள்ளார்.

● "அம்மா" வைத் தயாரித்த அசோஸியேடட் புரொடக்ஷன்ஸார் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை தெலுங்கு, தமிழ், மலையாளம், இந்தி ஆகிய பாஷைகளில தயாரிக்கப் போகிறார்கள்.

● ஸ்ரீதர் புரொடக்ஷன்ஸ் என்ற புது படக் கம்பெனி, ஜி. கார்த்திகேயன் என்பவர் எழுதியுள்ள "குற்றவாளி" யை படமாக்கப் போகிறார்கள்.

● லலிதா—பத்மினி—ராகினி ஆகிய மூன்று சகோதரிகளும் நடிக்கும் "மூன்று சகோதரிகள்" படத்திற்கான வசனங்களை எழுத "லெட்சுமி" ஒப்புக் கொண்டிருக்கிறாராம்.


முருகன் (ஜிந்துப்பிட்டி) சென்ட்ரல் (மாத்தளை) மனோகரா (யாழ்ப்பாணம்)

ஆரம்ப நாள்தொடக்கம் ஆயிரக் கணக்கானோர் பார்க்கின்றார்கள்!

உற்சாகமூட்டுவாள்-கண்ணீர்வடிக்க செய்வாள்-குலுங்கக்குலுங்க சிரிக்க வைப்பாள்!




அவளின் அழகும், இனிமையும் நெருங்கே ஜொலித்தன **ஆனால்** பாவம், மின்னல் ஒளியால் கண்பார்வையை இழந்தாள்.

காதலுக்காக தனது ஐஸ்வரியம், புகழ் எல்லாவற்றையும் பரித்தியாகம் செய்கிறாள் **ஆனால்** சோற்றுக்கு திண்டாடிய நிலைமையில் ரிக்ஷா வண்டி இழுத்து உயிர் வாழ்கிறான் ஓர் பணக்கார யுவன்

பட உலகில் ஓர் புதுமை! கதை உலகில் ஓர் புரட்சி!

என் தங்கை

மாதுரிதேவி, ஈ.வி. சரோஜா, வி. சுசீலா, எம். ஜி. ராமச்சந்திரன், நரசிம்மபாரதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 15 மே 14

இந்த மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்தக்கிழமையில் நிலைப்பிரிவும் அதிக பிரயாசமும் அற்ப லாபமும் வாக்குக் கலகமும் சிநேக விரோதங்களும், பெரியோர்களின் உதவிகளுமுண்டாம்.

மே 15 ஜூன் 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்த வாரத்தில் சிநேகக் கஷ்டமும் அற்ப வரவும் குடும்ப வழியால் விரயங்களும் வாகன கஷ்டங்களும் கொடுக்கல்வாங்கல் விருத்திகளுமுண்டாம்.

ஜோதிடமுனை

# கிரகங்கள் கூறுகின்றன

**'சுகன்யா'**

ஜூன் 15 ஜூலை 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்தக் கிழமையில் பிரயாசமிகுதியும், காரியப் பேறும், பொருள்வரவும் பூமி வாகன லாபமும் தரும வழியில் பண விரயங்களுமுண்டாம்.

ஜூலை 15 ஆகஸ்டு 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்த வாரத்தில் தொழில்முறைகளில் ஊக்கங்களும் அற்ப லாபமும் சிநேக விரோதமும்குடும்ப சுகக்குறைவுகளுமுண்டாம்.

ஆகஸ்டு 15–செப்டம்பர் 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்தக் கிழமையில் வாக்குவல்லபமும் பெரியோர் சகாயமும் அதிகாரப் பேறும் முயற்சிகளால் லாபங்களுமுண்டாம்.

செப்டம்பர் 15–அக்டோபர் 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்த வாரத்தில் தொழிலாளரின் உதவிகளும் காரிய விருத்தியும் தன லாபமும் இராச மதிப்பும் கொடுக்கல் வாங்கல் சிறப்புமுண்டாம்.

அக்டோபர் 15–நவம்பர் 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்த வாரத்தில் இராச பயமும் வாகன கஷ்டங்களும்பகையும் வரவின மிஞ்சிய செலவுகளும்குடும்பத்தில் பிணியுமுணடாம்

நவம்பர் 15–டிசெம்பர் 14

இம்மாசததில் பிறந்தவர்களுக்கு இந்த வாரத்தில் பிரயாசமிகுதியும் பல யோசனைகளும் தொழில்கள் சமவிருத்தியும் கடன் பயமும் குடும்பக கஷ்டங்களுமுணடாம்

டிசெம்பர் 15–ஜனவரி 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுககு இந்தககிழமையில் அதிக பிரயாசமும் அற்ப வரவும் கடன்படுதலும், குடும்ப சுகக்குறைவுகளும் அக்கினியால் பீடைகளுமுண்டாம்

ஜனவரி 15–பெப்ரவரி 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்த வாரத்தில் காரிய தாமதமும் பல யோசனைகளும் கடன் பயமும் நடந்த கருமங்களால் சிலபல நன்மைகளும் சிநேகிதஉதவிகளுமுண்டாம்

பெப்ரவரி 15 மார்ச் 15

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்தக்கிழமையில் தொழிற்சித்தியும் தனப்பேறும் கொடுக்கல்வாங்கல் விருத்திகளும் சிநேகவழியால் விரயங்களுமுண்டாம்.

மார்ச் 16 ஏப்ரல் 14

இம்மாசத்தில் பிறந்தவர்களுக்கு இந்த வாரத்தில் காரிய சித்தியும் பொருள் வரவும் குடும்பத்தில் பிணியும் பெரியோர்நட்பும் இன ஜன பந்துக் கூட்டங்களுமுண்டாம்.

## ரஞ்சிதம்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

களும் யுவதிகளும் நடமாடிக் காதல் புரிந்துகளித்திருந்த இடம் நாளைக்கு சூன்யமாகிவிடும். நாளைக்கு விடுமுறைக்சாக கலாசாலை மூடப்பட்டுவிடும் விடுமுறை விடுவது குறித்து சந்தோஷப்படாத ஆத்மாவும் ஒன்று இருக்க முடியுமா? ஆனால் அப்படி சந்தோஷப் படாத ஆத்மாக்கள் இரண்டு இருந்தன. ஒன்று சுந்தரம், மற்றது ரஞ்சிதம். (தொடரும்)

## சோற்றுப்............

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக மலைபோலக் குவித்துப் பிறகு அதை நெருக்கிப் பின்னப்பட்ட சேர்களிலே கொட்டி வெற்றிடம் இல்லாமல் நிறைத்து வைத்திருக்கின்றனர். செந்நெல்லைக் கொண்ட நிலம், வேலி ஒன்றுக்கு ஆயிரம் கலம் விளையும்படி காவிரியால் காப்பாற்றப்படும் நாடு. இந்த நாட்டுக்கு உரியவன் தான் கரிகாற் சோழன்"

இதனை இந் நூலின் 236-வது வரி முதல் 248-வது வரிவரையிலும உள்ள பகுதியிலே காணலாம்.

இழை அணி வனப்பின்
இன்னகை மகளிர்
போக்கு இல் பொலங்
கலம்
நிறையப் பலிகால்
வாக்குடி தரததர
வருத்தம் வீட
ஆர உண்டு
பேர் அசுர் போக்கி

என்ற வரிகளைக் கொண்டு பண்டைத் தமிழகததல் பொன் நகை செய்யும் வழக்கம் இருந்தது; பொற் பாத்திரங்கள் செய்யும் வழக்கம் இருந்தது. மது வருந்தும வழக்கம இருந்தது. களைப புத்திர மதுவையே மருந்தாகக் கொண்டனர் என்பதை அறியலாம.

பொருநர் ஆற்றுப்படையின்மூலம் இன்னும் பல தமிழ நாட்டுப் பழககவழககங்களைக காணலாம்.


ஒளியிற் சிறந்தது சூரிய பிரகாச
பீடியிற் சிறந்தது கமலா பீடியே

கமலா, லீலா பீடிகளும் பீடிக்குத் தேவையான நாகப்பூர், சிங்கறணி இலைகளும், ஆக்கூழ் நிந்பாணிபுகையிலைகளும சகாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்


வி. பி. அவசியம் கவனிக்கப்படும்.

கமலா ஸ்டோர்ஸ்
Proprietor S. V. பொன்னம்பலம்
15, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 3597. தந்தி: தாமரை.



சிலோன் எண்டர்டைன்மென்ட்ஸ் லிமிட்டெட்டார்
பெருமகிழ்ச்சியுடன் திரையிடும் உயிர் ஓவியம்

சென்ட்ரல் [கொழும்பு] மகேந்திரா [யாழ்ப்பாணம்] ஜோதி [தரிகோணமலை]



ஆரம்பநந்நாள் ஜூலை வெள்ளி 25

★ காதல் தனி மனிதனின் ஏகபோக உரிமையல்ல.
★ மணிமுடி தரித்த மன்னன் காதலிப்பதுபோல் ஒருபிடி சோற்றுக் கலையும் பிச்சைக்காரனும் காதலிக்கலாம்.
★ ஏழையின் காதலில் ஏமாற்றம் ஆனல் அரசனின் காதல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
★ இதுவரை வெளிவந்த உலக காதல் கதைகளுக்கெல்லாம்தலைமை தாங்கும் மகோன்னத சித்திரம்.


பரணி பிக்சர்ஸ் வெளியீடு

பானுமதி, நாகேஸ்வரராவ். நடித்த
காதல்



கதை: பானுமதி
காமரா: கமால்கோஷ்

★ முற்கூட்டியே பதிவுசெய்துகொள்வது நலம்.
★ பல்கனி சீட்கள்மாத்திரம் முற்கூட்டியே பதிவு செய்யலாம். ஆனல் படம் தொடங்குவதற்கு முன்னர் தான் டிக்கட்டுகள் விற்பனை செய்யப்படும்.



ஸ்டுடியோ: வாஹினி
சங்கீதம்: காலஞ்சென்ற
ஸி. ஆர். சுப்பராமன

★ கியூ வரிசையில் நின்று வரும் பெண்களுக்கு டிக்கட்டுகள்மாத்திரம் கொடுககப்படும்.
★ சகல பாஸ்களும், சலுகைகளும் மறு அறிவித்தலவரை ரததுச்செய்யப்பட்டுள்ளது.

போன்: 5033.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தில்லறி தோட்ட நிர்வாகத்தின் பிடிவாதம்

## தோட்டக் கமிட்டித் தலைவருக்கு 6 மாதச்சம்பளம் நஷ்ட ஈடு

### மத்தியஸ்தரின் தீர்ப்பு

டிக்கோயா தில்லறி (சாஞ்சமலை) தோட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டக் கமிட்டித் தலைவர் திரு குருசாமிக்கு தோட்டத்துரை வேலை கொடுக்க மறுததாலும், தொழிலாளர் காங்கிரஸை அங்கீகரிக்காததாலும், தோட்ட மானேஜ்மெண்டாருக்கும் தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையே தகராறு ஏற்பட்டது. இதனை விசாரணை செய்து சமரசம் செய்வதற்காக அரசாங்கத்தால் ஒரு விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டார்.

விசாரணை அதிகாரி இரு தரப்பினரையும் சமரசப்படுத்த முயற்சி செய்தார். தோட்டத்துரை அதற்கு இணங்கவில்லை பின்னர் விசாரணை நடைபெற்றது. ஆரம்பத்தில், தோட்டக் கமிட்டியை அங்கீகரிக்க மறுததை எதிர்த்தும், அதே முதலாளிக்குச் சொந்தமான அவிஸ்ஸாவெள கிளான்கோஸ் தோட்டத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் தெரிவித்தும் தில்லறித் தோட்டத் தொழிலாளர் 1951 ஜனவரி 29 தேதி வேலை நிறுத்தம் செய்தனர். பின்னர் தொழில் இலாகாவின் தலையீட்டின்மீது இவ் வேலை நிறுத்தம் 1951 ஆகஸ்டு 15ந் தேதி வாபஸ் வாங்கப்பெற்றது அதைத் தொடர்ந்து தோட்டக் கமிட்டித் தலைவர் திரு குருசாமி 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டார்.

திரு குருசாமி ஒழுங்காக வேலை செய்யாதவரென்றும், வேலைகளைத் தாமதப்படுத்தும்படி அவர் தொழிலாளர்களைத் தூண்டினரென்றும், வேலை நிறுதத காலத்தில் அவர் நாசவேலை செய்தாரென்றும், தோட்டத்தில் அவர் பிளவு ஏற்படுத்துகிறரென்றும் தோட்டத்துரை அவர்மீது குற்றம் சாட்டினர். ஆனல் விசாரணையின் போது இவற்றில் எந்தக் குற்றச்சாட்டையும் துரையினல் நிரூபிக்க முடியவில்லை. ஆகவே திரு குருசாமி நிரபராதியாகி விட்டார்.

எந்தத் தொழிற சங்கத்தையும அங்கீகரிக்கப் போவதில்லையென்று மானேஜ்மெண்டார் பிடிவாதம் செய்தனர். இது தொழிலாளர் வர்க்கத்தின் அடிப்படை உரிமையை மறுப்பதாகுமென்பதை மத்தியஸ்த அதிகாரி தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டுகிருர்.

தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத்தில் கூட்டம் நடத்துவதற்கும், தோட்டக் கமிட்டித் தேர்ந்தெடுப்பதற்கும் அனுமதியளிப்பதுடன், தொழிலாளர் காங்கிரஸை தில்லறித்தோட்ட மானேஜ்மெண்டார் அங்கீகரிக்க வேண்டுமென்றும் அவர் தமது கருத்தைக் கூறுகிருர்.

அத்தோடு, திரு குருசாமியை மீண்டும் வேலையில் அமர்த்திக் கொள்ள முடியவில்லையானல், தோட்ட நிர்வாகம் அவருக்கு 6 மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும், நல்லுறவு நிலவும் பொருட்டு காங்கிரஸ் அவரை தோட்டத்திலிருந்து வெளியே அழைத்துக் கொள்ளலாமென்றும் மத்தியஸ்தர் தனது தீர்ப்பில் கடைசியாக குறிப்பிடுகிருர்.

#### தொழிலாளியா கார் வாங்குவது?

புவாக்குப் பிட்டியைச் சேர்ந்த எல்ஸ்டன் தோட்டத்தில் வேலை பார்த்து வரும் நான்கு தோட்டத் தொழிலாளர்கள் சேர்ந்து ஒரு பழைய கார் வாங்கினர்களாம். இதன் கிரயம் ரூபாய் 2000 க்கு குறைவாகத்தான் இருக்குமென்று சொல்லப்படுகிறது.

தொழிலாளர்கள் கார் வாங்கிய செய்தி எப்படியோ சில பந்தங்கள் மூலம் தோட்டததுரையின் காதுக்கு எட்டிவிட்டது தோட்டத்துரைக்கு கோபம் மூக்கின்மேல் வந்துவிட்டது. தோட்டத் தொழிலாளியாவது கார் வாங்குவதாவது சரி பார்க்கிறேன் என்று ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிராரும்.

தோட்டத் தொழிலாளர்கள் வாங்கிய மேற்படி கார் தோட்டத்திற்குள் கொண்டு வரப்படுமானல் கார் வாங்கிய பிரஸ்தாப நான்கு தொழிலாளர்களுக்கும் உடன நோட்டீஸ் கொடுக்கப்படுமென பயமுறுத்தப்பட்டிருக்கிருர்கள். கார் வாங்கிய குற்றத்திற்காக ஏறகனவே ஒரு தொழிலாளி துரையின் கோபத்துககுப் பலியாகி விட்டதாகவும், அவருககு சம்பள வெட்டு நடைபெறுமென்றும் அறியப்படுகிறது.

#### சத்தியா கிரகத்துக்கு தடையா?

மாவத்தகம ... துள்ள ஸ்ரீநுவரைத் தோட்டத் தொழிலாளர்கள் கொழும்பில் நடைபெற்றுவரும் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து கொள்வதற்காக அதிகாரியிடம் விடுமுறை வாங்கிக் கொண்டு கொழும்புக்கு வந்து திரும்பிச் சென்ற இருபது தொழிலாளர்களுக்கு அவர்கள் பல ஆண்டுகள் வழமையாகச் செய்துவந்த பால் வெட்டு வேலை கொடுக்க முடியாதென தோட்ட நிர்வாகம் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட நிர்வாகத்துடன் கடிதப் போக்கு வரத்துகள் நடத்திக் கொணடிருப்பதாக அறியப்படுகிறது.

#### தோட்டத் துரையின் வருத்தம்

ரக்குவானைச் சேர்ந்த டெபடின் தோட்டத்துரை அதே தோட்டத்தில் வேலை பார்த்துவந்த ஒரு தொழிலாளியை அடித்து விட்டதாகக் கூறப்படும் புகாரை அடிப்படையாக வைத்து கடந்த வாரம ரக்குவான் ரெஸ்ட ஹவுஸில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் தோட்டத் துரைக்குமிடையே நடந்த ஒரு மகாநாட்டில் துரை தான செய்தது தவறு என்பதை ஒப்புக் கொண்டு தொழிற் சங்கத்துக்கு கடித மூலம் தனது வருததத்தை தெரிவிப்பதாகச் சொன்னர் இதனை காங்கிரஸ் பிரதிநிதிகள் ஏற்றுக கொண்டனர்.

#### தொழிற்சங்கத்தில் சேராதே!

உந்துகொடைப் பகுதியிலுள்ள "யுகிசைட்" எனனும் மரகதவல்லி தோட்டததில் வேலை பார்த்து வரும் தோட்டத தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கங்களில சேர்ந்து விட்டால் உடன் பற்றுச் சீட்டு கிடைததுவிடுகிறதாம்

இதே தோட்டத்தில் 1946-ம் வருடம் தொழிற் சஙகத்தில சேர்ந்ததற்காக 42 தொழிலாளர்களுக்கு பற்றுச் சீட்டு கொடுக்கப் பட்டது. அதன் மீது இலங் ... ... த்துக் கொண்டது. அப்போது யுத்தகாலமாயிருந்தபடியால் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் "ஸ்பெஷல் டிரைபியினல்" இருந்ததினல் அதற்கு காங்கிரஸ் மனுச் செய்து கொண்டது. நோட்டீஸ் கொடுக்கப் பட்ட 42 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படியும் நோட்டீஸ் கொடுத்ததற்கு நஷ்ட ஈடாக இரண்டு மாதச் சம்பள வீதமும் கொடுக்கும்படி கேகாலை ஜில்லா கோர்ட் மூலம் தீர்ப்புக்கிடைத்தது இதுபோக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கோர்ட் செலவுக்கு ரூ 105தும் கொடுககப்பட்டது. இந்த தொழிலாளர்களில் பலர் தங்கள் சொந்தக் காரணங்களை முன்னிட்டு அந்த தோட்டம்விட்டு போய் விட்டார்கள்.

ஆனல் இதே தோட்டத்தில் கடந்த மாதம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் சேர்ந்ததற்காக சுமார் 26 தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த நோட்டீஸ் கொடுத்த விவகாரம் தொழிலாளர்களுக்கிடையே பெரும் ஆத்திரத்தை உண்டுபண்ணியிருப்பதாகத் தெரிகிறது. நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் காங்கிரஸில் வந்து சேருகின்றனர் தொழிலாளர் தங்கள் உயிர்நாடியான தொழிற் சங்க உரிமையை நிலை நாட்ட எத்தகைய தியாகததுக்கும் தயாராயிருககின்றனர். தோட்ட நிர்வாகம் தனது முரட்டுப் பிடிவாததத்தினல் மீண்டும் 1946ம் வருடத்திய நிலைமையை உண்டுபண்ணிவிடுமோவென ஐயப்படவேண்டியிருக்கிறது.

#### இறுதி மூச்சிலும் இலட்சிய உணர்ச்சி

கடந்த 12 வருடங்களாக காங்கிரஸ் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காக உழைத்து உழைத்து, அதன் காரணமாக சுகயீனமுற்ற எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த களனித் தோட்டம் திரு சந்தனம் கங்காணி என்பவர் சமீபத்தில் கரவாநல்லை ஆஸ்பத்திரியில் மரணமானர். அவரின் உயிர் பிரியும் தருவாயில் அவரது இளைய சகோதரரும் பக்கத்திலிருந்தாராம். அதுசமயம் அங்கிருந்த தன் குடும்பத்தினிடம் கீழ்க்கண்டவாறு தெருவித்ததும் அவர் உயிர் பிரிந்ததாக, பக்கத்திலிருந்தவர்கள் கூறுகிருர்கள்.

"காங்கிரஸை நாமெல்லாம் அரும்பாடுபட்டு முன்னுக்கு கொண்டு வந்தோம். அதற்கு உழைக்க முடியாமல் என் ஆவி பிரியப்போகிறதே என்ற கவலைதான் என் கடைசி நேரத்திலும் என் மனதைவிட்டு அகல மாட்டேங்கிறது நம் காங்கிரஸை வளர்க்க நீங்களெல்லாம் பாடுபடனும். மற்றவங்க ஏமாத்துவாங்க அதுலே நம்மவங்க விழாமல் பாத்துக்கொள்ளுங்கள் போய்வாரேன்' என்றதும் அவரது உயிர் பிரிந்ததாம். அவரின் பூதஉடல் தோட்டக் கமிட்டியின் சார்பாக தோட்டத்திற்குக் கொண்டுவந்து மிக மரியாதையுடன அடககம் செய்யப்பட்டது அதுசமயம் இ. இ. கா. ஜில்லா பிரதிநிதிகளுட்பட தோட்டத்திலுள்ள ஜனங்கள் அனைவரும் தங்கள் கடைசி மரியாதையைச் செலுத்தினர்.

### சகிப்பாருண்டோ?

அட்டை கடிக்கஉடலின் ரத்தஞ் சிந்த
கட்டைகுத்தக் கால்நோவகாடுமேடாய்
சட்டையின்றி சாகுளிரில் நின்றுழைத்
தோர்க்(கு)
வோட்டுரிமை இல்லை எனில் சகிப்
பாருண்டோ?

—வ வே பழனிநாதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நன்மை செய்

கண்ணன் அன்றுதான் அந்தப் பள்ளிக்கூடத்தில் வந்து சேர்ந்தான். புது மாணவனானபடியால் எல்லோரும் அவனைக் கேலி செய்வதும் அவனைக் கோட்டாடண்ணுவதுமாக இருந்தனர். 'உங்களை நான் என்ன செய்தேன்! ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்' என்றான் சாதுவாக கண்ணன்

"வேதாந்திமாதிரி பேச வந்திட்டார்" என்றான் மோகன். எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். பிறகு ஆசிரியர் வந்த உடனேதான் எல்லாம் அடங்கியது. சாப்பாட்டுக்கு பள்ளி மணி அடித்தது. எல்லோரும் புற்றீசல் போல் வெளியே ஓடி வந்தனர். கண்ணன்தான் கடைசியாக வந்தான். கீழே பார்த்துக்கொண்டு வந்த அவனது கண்கள் தூரத்தில் ஒரு அழகான பேனா விழுந்து கிடப்பதைப் பார்த்தது உடனே ஓடிப்போய் அதை எடுத்தான். அது ஒரு பார்கர் பேனா அதில் "மோகன்" என்று எழுதியிருந்தது உடனே ஓடோடியும் சென்று அதைத் தலைமை ஆசிரியரிடம் கொடுத்தான்.

மறுபடியும் பள்ளி மணி அடித்ததும் எல்லோரும் தம்தம் வகுப்பில்போய் உட்கார்ந்து கொண்டனர். மோகன் சோர்ந்துபோய் காணப்பட்டான். அவனுடைய பேனா தொலைந்ததே காரணம். மோகன் ஆசிரியரிடம் கூறினன் அவர் கண்ணனைத் தவிர வேறொருவரையும் சந்தேகிக்கவில்லை. "கண்ணா! இவனுடைய பேனாவை எடுத்தாயா?" என்று கண்டிப்பான குரலில் கேட்டார். அப்பொழுது அந்த அறைக்குள் தலைமை ஆசிரியர் வந்தார். கண்ணனின் உண்மையான குணத்தைப்பற்றிக் கூறி அந்தப் பேனாவை மோகனிடம் கொடுத்தார் மோகன் கண்ணனை நன்றியறிதலோடு நோக்கினன். அப்பொழுதுதான் மோகனுக்கு "ஒருவன் உனக்கு தீமை செய்தால் அவன் நாண நீ நன்மை செய்!" என்ற காந்திஜியின் வாக்கு நினைவுக்கு வந்தது.

ஜெ. அருணாசலம்
கண்டி

## உண்மை ஒளி

பொய் நிறைந்த உள்ளம் இருள் மயமாகவும், உண்மை பேசுவோரது உள்ளம் வெளிச்சமாகவும் இருக்கும் இருளை அகற்ற விளக்குத் தேவை ஆனல் மன இருளையகற்றுவதற்கு வேண்டியது உண்மை விளக்கேயன்றி வேறொன்றும் இல்லை. இது முழுவதும் உண்மையே சூரிய வெளிச்சம்போன்ற இன்னும் பல வெளிச்சங்கள் உள்புக முடியாத உள்ளத்தை உண்மை ஒளி பிரகாசிக்கச் செய்யவல்லது. நாம் உண்மைக்கு உயிர் கொடுத்தால் அது நம் கொள்கைக்கு உயிர் கொடுக்கும்

வ. பா நவரத்தினம்
இந்துக் கல்லூரி

## எந்த நாளோ

இன்றையத் தமிழகத்தில் எத்தனை வேறுபாடுகள் சாதி மதச் சண்டைகள் எத்தனை? 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற லட்சியத்தின் அடிப்படையில் வாழ்ந்தவர்கள் மத்தியில் எத்தனை பேதங்கள்! 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவரின் வாக்கையும் மறந்து தாழ்த்தப்பட்ட இனம், ஒதுக்கப்பட்ட இனம், தீண்டப்படாத இனம், சுரண்டப்படுகிற இனம் என்ற பேதங்களில் இன்றைய தமிழகம் மூழ்கி விட்டது. இந்த நிலை மாற வேண்டும். தமிழர்கள் உடலினால் பலர் எனினும் உள்ளத்தால் அவர்கள் எல்லோரும் ஒருவரே என்ற நிலையை அடைய வேண்டும். தமிழர்களின் ஒற்றுமையைக் கண்டு வஞ்சக நினைப்புடன் அவர்களை நெருங்க முடியாது என்று இந்த வையகமே கலங்க வேண்டும். இந்தக் காட்சியைக் கண்டு எனது உள்ளம் சொக்கும் நாள் எப்பொழுது வரும்? ஆவேசத்துடன் கேட்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிஞன உள்ளத்துடிப்பு பாட்டாக வெளிவருகிறது.

"வெள்ளம் போல்
தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்
அன்னார்
உள்ளத்தால்
ஒருவரே மற்
றுடலினால் பலராய்க்
காண்பார்
கள்ளத்தால் நெருங்
கொணாதே
எனவையம்
கலங்கக் கண்டு
துள்ளும் நாள்
எந்நாள் உள்ளம்
சொக்கும் நாள்
எந்த நாளோ?"

கவிஞரின் கனவு நினைவாக மாற வேண்டும் மாற்றப்பட வேண்டும் இன்றைய மாணவர்களால் வருங்கால தமிழகத்தில் மக்கள் எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும். சாதி மதச் சண்டைகள் தொலைய வேண்டும். சமத்துவம் பரவ வேண்டும். அறிவு வளர வேண்டும். ஆண்மை ஓங்க வேண்டும். சூதும், சுரண்டலும் ஒழிய வேண்டும். துன்பமும், துயரும் மடிய வேண்டும். இனபத் தமிழகம் இனிதே வாழ வேண்டும். இவ்வித மறுமலர்ச்சி சமூதாயத்தை நிறுவும் பணியில் மாணவர்கள் தங்கள் கடமையை மறந்து விடக்கூடாது.

செல்வி டி. அரியமலர்
சென் மேரிஸ் கல்லூரி
திரிகோணமலை

## நமது கடமை

அன்புமறமும் வழுவாது வாழ்ந்திட்ட
தமிழர்கள் நாமென்று கூறிடுவோம்
துன்பத்துயரிலும் சோர்ந்திடாது—தேச
தொண்டு செய்வோமென்று கூவிடுவோம்

பொய்யும் புரளியும் போக்கிடுவோம்—பழி
பாதகக்குரோதத்தை நீக்கிடுவோம்
உய்யும்வழியினை நாடிடுவோம்—உயர்
உத்தம ஞானத்தை தேடிடுவோம்

அடிமையாய் வாழ்வதை வெறுத்திடுவோம்—மூட
அறியாமை வழக்கத்தை வீழ்த்திடுவோம்
திட்டம் வகுத்து தமிழர் நாம் வாழ்ந்திட
சட்டம் தினசரி செய்திடுவோம்

பட்டம் பதவிக்காகப் பாடுபடும்—பொல்லா
பாதக வஞ்சகர் பேதையரை
பட்டப்பகலிற் பலரும் ஒன்றுகூடி
பார்த்து சிரித்திடச் செய்திடுவோம்

யே. பிருன்ஸிஸ்
அர்ச். சூசையப்பர் பாடசாலை
திரிகோணமலை

## உயிர்தப்பிய வைத்தியர்

பஞ்சாப்பு தேசத்துப் போர் வீரன் ஒருவன் ஒரு கப்பலில பிரயாணம் செய்துகொண்டிருந்தான். நடுக்கடலில் அவனுக்கு கடுமையான நோயுண்டானது வைத்தியர் அவனது தேக நிலையைப் பரீட்சை செய்து பார்த்து இவனை ஒரு கல்லோடு பிணைத்துக் கடலில் எறிய வேண்டுமென கடுமையான உத்தரவு பிறப்பித்தார்.

அந்த நோயாளியான போர் வீரன் அவர்கள் தன் உயிருக்கு உலைவைத்துவிட்டார்கள் என்பதை எப்படியோ அறிந்துகொண்டான். அவனுக்குச் சினம் பொங்கியது. அவன் அஞ்சாநெஞ்சுடன் எழுந்து துப்பாக்கியைக் கையில் பிடித்துக்கொண்டு வைத்தியரை நெருங்கினன்; அவர் மார்புக்கு எதிராகத் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு "வைத்தியரே! நானு நோயாளி? நோயாளி எனறு என்னைக் கூறுகிறீர் சீக்கிரம் சொல்லும் இன்றேல உன் மார்பில் குண்டு பாயும் என்றான். செய்வதறியாது திகைத்த வைத்தியர் திடீரெனறு தம் அறைக்குள் ஓடி, ஒரு கடிதத்தில் "இவன நோயாளியலலன; ஆரோக்கியத்துடன் இருக்கிறான்" எனறு ஓர் யோக்கிதா பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு உயிர்தப்பினா.

பவளமலர் கந்தையா
தாமரைக்கேணி
மட்டக்களப்பு

## நேர்மையுள்ள சிறுமி

நகிலா ஓர் நேர்மையுள்ள சிறுமி அவளது தகப்பனர் மிகவும் பணக்காரர். அந்த நிலையிலிருந்தும் அவர்கள் நகிலாவை பள்ளிக்கு அனுப்பி வைத்தனர். நகிலா ஒழுங்காய்ப் படித்து வந்தாள் விளையாட்டிலும் கெட்டித்தனமாய் இருந்தாள்.

ஒருநாள் காலை 10 மணியிருக்கும் நகிலா வீதி வழியே போய்க்கொண்டிருந்தாள் "பளிச் பளிச் சென்று அவள் கண்களில் ஒரு பொருள் தென்பட்டது. குனிந்து அதை எடுத்தாள். அது ஒரு அழகான மோதிரம்" ஐயோ!...... இதை யார் இழந்தார்களோ என்று நகிலா அனுதாபப்பட்டுக் கொண்டிருந்தாள். பின்பு அதை எடுத்துக்கொண்டு நீதிபதியிடம் சென்றாள். மோதிரத்தை அவரிடம் கொடுத்து விஷயத்தைக் கூறினாள் நீதிபதிக்கு அவளிடம் சந்தோஷம் உண்டாயிற்று உண்மையில் அது அவருடைய மோதிரம்தான் அது அவரின் தந்தையாரால் கொடுக்கப்பட்ட பூர்வீகச் சொத்து.


யு. எம். முகையதீன
மத்திய கல்லூரி
மட்டக்களப்பு

## இசைத் தமிழ்

தமிழ் இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகதமிழ் என மூவகைப்படும் நம் முன்னோராகிய தெய்வப் புலவர் இயற்றிய திருக்குறள் மாணிக்கவாசகர் தந்த திருவாசகம்போன்ற நூல்கள் கல்நெஞ்சையும் கரைக்க வல்லன. சிறப்பு மிகு நம் தமிழை வளர்ப்பது மாணவர்களாகிய நமது கடமையாகும் பயித்தியத்தினால் பீடிக்கப்பட்டுள்ள மனிதர்களையும் குணப்படுத்தும் சக்தி இசைத் தமிழில் உண்டு. இதனால்தான் இசைத் தமிழ் எங்கு பார்த்தாலும் பரவியிருக்கின்றது.

நமது கவிஞராகிய "பாரதியார்" நாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல இனிதாவதெங்கும் காணோம் என்று கூறி தமிழின் பெருமையை உலகத்தாருக்கு காட்டியிருக்கிறார். மற்றைய மொழிகளைவிட இனிமையான இசைத் தமிழை மற்றவர்கள் பாடிக்கொண்டிருக்கும் பொழுது தாயின் மடியில் பால் பருகும் குழந்தைகூட தன்னை மறந்து உறங்கிவிடுகிறது. நாம் கவலை அடைந்து, அல்லது ஆபத்திலிருக்கும் காலத்தில் இனிக்கும் தமிழிசையைக் கேட்டால் உடனே பரவசமடைந்துவிடுவோம் இதற்குக் காரணம் வீர தமிழர்களின் இன்னிசை ஓசையல்லவா? ஆகையால மாணவர்களாகிய நாம தமிழை முதலாவது கற்க வேண்டும். பின்னரே மற்றைய மொழிகளைக் கற்க வேண்டும்.

ஆர். ஜே.
பேரின்பநாயகம்
வெளிமட குருப்
வெளிம...



விமானம் ஓட்டுவதற்குப் பயிற்சி பெறுகின்ற இரு டெண் விமானிகளும், அவர்களின் காட்டனும் லண்டன் விமான நிலையமொன்றிலிருந்து ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பப் பாரத்தைச் சமாளிக்க வழி

## அவசியமான போது குழந்தைப் பிறப்பு

முப்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் நியூயார்க் நகரத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்த தாதி (நர்ஸ்) அவசரமாக அழைக்கப்பட்டாள். தானே கருவைச் சிதைத்துக் கொண்டதன் விளைவாக துன்பப்பட்ட ஒரு பெண்ணுக்கு மருத்துவம் செய்யவே அவள் அழைக்கப்பட்டாள். பலநாட்கள் அந்தத் தாதியும் ஒரு டாக்டரும் அரும்பாடுபட்டு அந்தப் பெண்ணை பிழைக்க வைத்தனர்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு அதே தாதி, அதே வீட்டுக்கு, அதே காரணத்துக்காக அழைக்கப்பட்டாள். இந்தமுறை அவள் பிழைக்கவில்லை. ஆனல் அவள் சாவதற்கு முன்பு தாதியிடம் ஒன்று சொன்னுள். கர்ப்பம் ஏற்படாமல் தடுப்பது எப்படி என்று தான் டாக்டரைக் கேட்டதாகச் சொன்னுள்.

அவளுக்கு ஏற்கனவே பெரிய குடும்பம் இருந்தது. அவளுடைய கணவன் பெறுகிற சிறிய வருமானத்தில் இருக்கிற பிள்ளைகளைப் போஷிப்பதே பெரும்பாடாக இருந்தது. ஆனல் அவளுடைய கேள்வியைக் கேட்டு சிரித்துவிட்டு டாக்டர் சொன்ன பதில் இது தான்; "உன் கணவனை வேறு இடத்தில் போய்ப் படுத்துத் தூங்கச் சொல்" ஆகவே முப்பது வயதைக் கூட எட்டிப்பிடிக்காத அந்தப் பெண் பழையபடி அதே பரிதாப முறையைத் தான் கையாளவேண்டியிருந்தது. இந்தத் தடவை அவளால் பிழைத்தெழ முடியவில்லை.

### அவள் சபதம்

ஆனல் மார்கரெட் சாஞ்சர் என்ற பெயருடைய அந்தத் தாதி அப்பொழுதே அந்த இடத்திலேயே ஒரு உறுதி செய்தாள்.

"நான் என்னசெய்வது?" என்று அவள் கேட்ட அந்தக் கேள்விக்குப் பதில் தேடுவதற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தாள் தாதி மார்கரெட் சாஞ்சர். அவளுடைய முயற்சியின் விளைவாகத்தான் விஞ்ஞான ரீதியாக குடும்பகட்டுதிட்ட முறை ஆரம்பமாயிற்று. கடந்த 39 ஆண்டுகளில் பெற்ருேர்கள் தங்களுடைய குடும்பம்பற்றி புத்திசாலித்தனமாக எங்ஙனம் திட்டமிடுவது என்ற இயக்கம் வெகுவாக வளர்ந்திருக்கிறது. உலகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் பரவியிருக்கிறது.

ஆனல் அந்தக் காரியம் எளிதானதாக முடியவில்லை. மனித வாழ்வுக்கு அடிப்படையான இந்தப் பரச்னைகளைத் தீர்க்க விஞ்ஞான அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்று வாதாடியவர்கள் அறியாமையையும் குருட்டு நம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. உலகத்தின் எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் குடும்ப கட்டுதிட்டம் மிக அவசியமானதாக இருக்கிறதோ அங்கெல்லாம்தான் இடையூறுகளும் எதிர்ப்புகளும் ஏராளமாயிருக்கின்றன.

### வசதியிருக்கும் போது

குழந்தைகளை எந்தக் காலத்தில் பெற்ருேர்கள் காப்பாற்றி வளர்க்க முடியுமோ அப்பொழுது மட்டும் குழந்தை பிறக்க உதவியளிப்பதே குடும்ப கட்டுதிட்ட முறையின் வேலை. இது பலருக்கு கருத்தரிப்பதைத் திருத்துவது போன்ற செயலே மற்றுஞ் சிலருக்கு தாயின் உடல் நிலைக்குத் தகுந்தாற்போலவும் தந்தையின் வருமானத்துக்கு ஏற்பவும் ஒரு குழந்தைக்கும் மற்ருெரு குழந்தைக்கும் இடையே உள்ள காலத்தை வரையறுப்பதாகும்.

பெரிய குடும்பத்தைச் சமாளிக்க முடியாத நிலையில் இருக்கிறவர்களுக்குத் தான் மிகப் பெரிய குடும்பங்கள் ஏற்படுகின்றன. இது இன்றைய வாழ்வின் துன்பமான நிலை. நவீன கைத்தொழில் நகரங்களில் எல்லாம் இத்தகையவர்களுக்கு வாழ்க்கை நிலையும் பெரும் தொல்லையாக அமைந்திருக்கிறது.

பழைய நாளில் ஜனப்பெருக்கத்தை யுத்தமும், பஞ்சமும், தொற்று நோய்களும் தடுத்து ஈடு செய்து வந்தன. ஆனல் இப்பொழுதோ மரண விகிதத்தை விஞ்ஞான கண்டு பிடிப்புகளின் மூலம் குறைத்து விட்டோம். இதனல் நாம் மிக மோசமான இக்கட்டான நிலையை ஏற்படுத்தியிருக்கிருேம். அதிகப்படியான ஜனத்தொகையுடன் ஏழ்மை, சிறுவர் குற்றங்கள், நோய், குழந்தைசாவு, கருச்சிதைவு முதலிய பிரச்னைகளும் நம்மை நாலா பக்கமும் சூழ்ந்துகொண்டன.

### அவசியம் அல்லவா?

நம்முடைய வாழ்நாளை நீடிக்கவும், உடல் நலத்தைப்பெருக்கவும் நம் அறிவை புத்திசாலித்தனமாக உபயோகிக்க வேண்டும் என்பது சரியென்ருல் அதே வகையில் பிறப்பு எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் நியாயமானதே. ஆனல் எந்த முறையைக் கையாளுவது என்பதில்தான் கருத்து வேற்றுமை மூளுகிறது.

ஒரு தேசத்தின் செல்வம் குழந்தைகளைப் பொறுத்தது என்று சொல்லப்படுகிறது. ஆனல் அக்குழந்தைகள் அறிவும் ஆரோக்கியமும் பலமும் மகிழ்ச்சியும் மிக்கதாக இருக்கவேண்டும். குழந்தை பிறப்புபற்றி திட்டமிடப்பட்டு குழந்தை அன்புடனும் கவனிப்புடனும் வளர்க்கப் படாவிட்டால் ஆரோக்கியமோ மகிழ்ச்சியோ இருக்க முடியாது.

சமுதாயப் பிரச்னைகளில் மிக முக்கியமானதும் அவசரமானதுமான பிரச்னை குடும்ப கட்டுதிட்டம். இந்தத் துறையில் நாம் முன்னேறுவது எதிர்காலத்தில் உண்மையிலேயே செல்வம் மிக்க பிரஜைகளை உண்டாக்குவதாகும்.

---

### மட்டக்களப்பு சாப்பு சிப்பந்தியின் வெற்றி

மட்டக்களப்பு மெஸர்ஸ் ஜே. எம். எஸ். மிராண்டா அன் சன்ஸ்என்ற ஷாப்பில் வேலைபார்த்து வந்த திரு. அந்தோனி பிச்சையா பெர்ணண்டோ என்ற சிப்பந்தியை மேற்படி கம்பெனியார் திடீரென்று வேலை நீக்கம்' செய்ததால் சிப்பந்தி உடனே கொழும்பிலிருக்கும் அகில இலங்கை சாப்பு சிப்பந்திகள் யூனியன் ஜில்லா பிரதிநிதி திரு எல். வில்லவருயரிடம் புகார் செய்தார்.

இது சம்பந்தமாக ஜூலை மாதம் 8-ம் தேதி, காலை 10 மணிக்கு ஒரு முக்கூட்டு மகாநாடு மட்டக்களப்பில் நடைபெற்றது. அவ்வமயம் சாப்பு சிப்பந்திகள் யூனியன்தலைவர் திரு. எஸ். செல்லையா மேற்படி சிப்பந்தியின் சார்பில் ஆஜரானர் மேற்படி சிப்பந்திககு ரூபாய் 75-00 நஷ்ட ஈடு கொடுக்குமாறு மகாநாட்டில் முடிவு செய்ததை யொட்டி யூனியன் மூலம் திரு. ஏ. பி பெர்ணண்டோவுககு மேற்படி தொகை வாங்கிக்கொடுக்கப்பட்டது

---

### எளிய......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதனுக்குப் போதுமானது, அதிக மேலான அறுசுவை அள்ளி வீசும் ஆகாரங்கள்தான் மனிதர்களுக்கு இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை; உயரிய உணவுதான் வேண்டுமென்ருல் மனித இயற்கைக்கு விரோதம் செய்வதென்பதே இதன் தாத்பரியம். நடுநிலையை விட்டு விட்டு அதிக மேலாகவும் அல்லது அதிக கீழாகவும் உடை விஷயத்திலும், உணவு விஷயத்திலும் மக்கள் நடந்துகொள்ளுவார்களாயின் அதனல் பறபல கஷ்டங்களும், துன்பங்களுமேதாம் விளையும். இந்த மோசமான முறையை மக்கள் கைக்கொள்ளுவார்களாயின் மனித வாழ்க்கையே நாசமடைந்து சீர்குலைந்து போகுமென்பதில் ஆச்சரியமில்லை.

—ஜஹ்ரா யூசுப் பேகம்

---

## வாடா மலர்

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

அவள் முகத்தில் ஏதோ பெரியதொரு பாரம் குறைந்ததுபோன்ற உணர்ச்சி தெரிந்தது. அரச மரத்தின் கிளைகளில் தங்கிக்கொண்டிருந்த குருவிகள் கீச் கீச் சென்று கத்தின. "இளமைக்கு காதலுக்கு இணையேது அழிவேது" என்று எங்கோ வெகு தூரத்தில் பாடிக்கொண்டிருந்த ரேடியோவின் மெல்லிய ஓசை கேட்டது.

தொடர்ந்து அவள் பேசினுள். "என்னிடம் சண்டை போட்டுக்கொண்டு அடிக்கடி சொர்ணம் என்ற ஒரு பெண்ணைப்பற்றி என் கணவர் அதிகமாகப் புகழுவார். அந்தப் பெண் நாள் தவருமல் அவருக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கும். அவளுடைய படமும் என் சூட் கேஸில் இருக்கிறது" என்று சொன்னுள். சொர்ணத்தைப்பற்றி நான் கொண்டிருந்த சந்தேகத்திற்கு ருசுக்கள் கிடைத்திருப்பதாகத் தெரிந்தது. 'படத்தை காட்டு பார்க்கலாம்' என்று கேட்டேன்.

'ஓகோ வாருங்கள்' என்று எழுந்து நடந்தாள் அவள் தங்கியிருந்த ஹாஸ்டலுக்கு என்னை அழைத்துக் கொண்டுபோய் முன் ஹாலில் உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே போனவள் ஒரு கட்டுக் கடிதங்களையும் ஒரு புகைப் படத்தையும் கொண்டுவந்து என் முன் நீட்டினுள். என்னை யாரோ உயிரோடு அங்கமங்கமாக அரிவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது என் சந்தேகம் தீர்ந்துபோயிற்று. நான் ஒன்றும் பேசாமல் எழுந்து நடந்தேன்

நான் என் விடுதியை அடைவதற்கும் தந்திவருவதற்கும் சரியாகவிருந்தது; என் தாய் எனக்கு தந்தி கொடுத்திருந்தாள் "என் மனைவி காணுமற்போய் விட்டாள்" என்று.

அறைக்குள் புகுந்து தாள்பாள் போட்டுக் கொண்டேன். மேசைமீது என் பெயருக்குவந்த கடிதங்கள் கிடந்தன அவற்றில் சொர்ணத்தின் கையெழுத்தில் ஒரு கடிதம்... அவசர அவசரமாக அதைப் பிரித்தேன் மிஸ்டர் ராஜ்! என் நீண்ட நாள் கனவு கைகூடி விட்டது. பிஞ்சு உள்ளத்தில் குடியேறிய என் அன்புக் காதலன் சுந்தரத்துடன் நான் போகிறேன் என் மூன்று குழந்தைகளில் மூத்தவள் தேவகியை மட்டும் நான் கொண்டுபோகிறேன். காரணம் அவள் உங்கள் குழந்தையல்ல சுந்தரத்தின் பெண். காதல் வாழ்க்கை தான் உலகில் ஜீவசக்தி நிரம்பியது. அந்த வாழ்க்கையை ஆரம்பிக்கப்போகிறேன் உங்களுக்கு என் நன்றி

சட்டத்தின் மூலமும்—சமூகத்தின் மூலமும் தங்களுக்கு மனைவியாக இருந்து இன்றுடன் விலகிப் போகும்

சொர்ணம்.

எத்தனை தடவைதான் அந்தக் கடிதத்தைப் படித்தேனே தெரியாது பொழுது புலர்ந்து திலகம் வந்து கதவைத் தட்டும்வரையில் நான் தூங்கிக்கொண்டிருந்தேன் அந்தச் செய்தியை அறிந்ததும் அவள் மூர்ச்சித்து விழுந்தாள். எதிர்பாராதவிதமாக நான் அவளை தாங்கிப் பிடித்து கட்டிலில் கிடத்தினேன். அவளுடைய சுருண்ட கேசரங்கள் அவள் மதிவதனத்தில் விழுந்து விகாரமாகக் காட்சியளித்தன அவற்றை உரிமையோடு—பத்து வருஷங்களுக்கு முன்பிருந்த உரிமைபோடு கணவன்—மனைவியென்ற மாற்றமுடியாத உரிமையோடு துணிகரமாக ஒதுக்கிக் கொண்டிருந்தேன்.

இத்தனை வருடங்களுக்குப் பின்னும், வாழ்க்கையில் இத்தனை அலைச்சல்களுக்குப் பின்னும் அவளும் நானும் மொத்தம் ஐந்து குழந்தைகளுக்கு தாயும் தகப்பனுமான பின்பும் திலகத்தின் காதல் என் மனதில் ஒரு வாடா மலராய் இருப்பதேன்? அவள் மனதிலும் அக்காதல் ஒரு வாடா மலர் தானு?

அவள் உதடுகள் பிரிந்தன. கண்கள் வெகு கஷ்டப்பட்டுத்திறந்தன அவற்றில் பத்து வருடங்களுக்கு முன்பிருந்த காந்த சக்தி கவர்ச்சி—கட்டிளமை சுடர் விட்டுப் பிரகாசித்தது

---


**மாதவிடாய் நின்றுபோனதா?**

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

**கர்ப்பத்தடை**

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 15-0-0 ஜெல்லி விலை ரூ. 8-8-0 (தபால் செலவு தனி)

சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11

M/grs: SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1


பிரான்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கிங்ஸ்லி வெம்பிளி வெலிங்டன்

[கொழும்பு] [கண்டி] [திரிகோணமலை]

சினிமாஸ் லிமிட்டெட்டார் திரையிடும் மகோன்னத திரை ஓவியம் !




* இரக்கமற்ற இரும்பு நெஞ்சக்காரன் ஒருவனின் கழுகுப்பார்வைக்கு இலக்காகும் ஏழைக் குடும்பத்தின் அவல நிலை.
* துரோகமே புரிந்தறியாத நிரபராதி வேலைக்காரன் மீது திருட்டுக் குற்றச்சாட்டு.
* பழிக்குப் பழி வாங்க விரப்பன் கையாளும் சதிப் படலம்.

முதலியார் வளர்ப்புப் பெண் மீது குமார் பலாத்காரம்.

குமாருக்கு விஷமளித்த து யார்? கமலாவின் காதல் என்னவாயிற்று? கொலைக்குற்றம் சாட்டப்பட்ட மோகன் கதி என்ன?

## நெஞ்சைவிட்டகலாத நிகழ்ச்சிகளின் கோவை

உங்கள் அபிமானத்தைக் கவர்ந்த முதல்தர நடிகர்கள் நடித்தது.



| நடிகர்கள்: | நடிகைகள்: |
|---|---|
| டி. ஆர். மகாலிங்கம் | மாதுரி தேவி, |
| டி. எஸ். பாலையா, | எஸ். வரலட்சுமி, |
| எஸ். வி. சுப்பையா, | எம். எஸ். திரௌபதி |
| வி. கே. ராமசாமி, | கே. ஆர். செல்லம். |
| வி. எம. ஏழுமலை, | டி. வி. குமுதினி |



# வேலைக்காரன்

தீபவொளி மோடர்ன்

[நுவரெலியா] [பதுளை]

---

## மைலன்

டி. ஆர். மகாலிங்கம், லலிதா, பத்மினி நடித்த

# வேதாள உலகம்

## காமினியில்

நளினிஜெயவந்-சுரேஷ் நடிக்கும் உயரிய ஹிந்திச் சித்திரம்

# ஜாடு

இப்பத்திரிகை கொழும்பு, தட்டாதெரு, 196ம் இலக்க இலத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் ஸிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் சார்பில் 194 ஏ, தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1952 ஜூலை 20ந் தேதியிட்டுப் பிரசுரம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org